பதிவு எண் 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று.

	ரூ. அ.
வருட சந்தா	3—0
6 மாத சந்தா	1–12

[வாரப்பதிப்பு.]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

	ரூ. அ.
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வருஷம் ஆனி-மீ 6-உ (20—6—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 8.

உண்மையான கதர்!

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,

காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,

ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

வந்தேமாதரம்.

கரூர் சுயம் கத்தர்.

தமிழ்நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள் துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளைபீஸ்கள். ஷர்ட்டிங், கோட்டிங், சால்வை தினுசுகள். கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும், தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

எஸ். ராமசாமி அய்யர்,

ராம விலாஸ் கதர் ஸ்டோர்ஸ், கரூர்.

(அத்தாட்சிப் பத்திரம்.)

(தமிழ்நாட்டு காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ் ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால், கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

எஸ். ராமநாதன், காரியதரிசி கத்தர் இலாகா

கதர்! கதர்!! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்

அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

—:o:—

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள். பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சீட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை சாப்தாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,

A. முருகேச முதலி.

No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.

வைத்துக்குளி S. I. Ry.

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், நாடாக்கள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வீ. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ் ஆர். எம். ராமசாமி செட்டியார்,

கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,

பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,

(திருப்பூர் மார்க்கம்.)

நமது இந்தியா.

நாம் பிறந்தது இந்தியா தேசம். நமது முன்னோர் பிறந்ததும் இந்தியா தேசம். நமது புதல்வர் பிறக்கப்போவதும் இவ்விந்தியா தேசத்திலேயே. இங்ஙனமாக நமது இந்தியா. நேற்றைக்கும் இன்றைக்கும் நாளைக்கும் நம்முடையதே. நமக்கு எவ்விதத்திலும் உரிமையான அத்தகைய தோர் நாட்டைப்பற்றி நாம் எப்பொழுதுமே கவனித்துக்கொண்டிருத்தல் சாலச்சிறந்த தன்றோ? நமது இந்தியா என்றும் நம்முடைமையே. ஆகையால் தான் அதனை நாம் "நமது இந்தியா" என்கின்றோம். நமக்குரிய நாட்டை நாம் இழந்து விடவோ அல்லது அதனை நேர்படக்காப்பாற்று திருக்கவோ செய்யின் நமக்கு அதை விட இழிவை உண்டு பண்ணுவது பிறிதியாதுளது?

நம் இந்தியாவின் தற்போதைய நிலைமையைப்பற்றிக் கவனிக்குமிடத்துக் குருடரும் அறிவினரும் கன்னெஞ்சரும் கண்ணீர் சொரிவரென்றால் நாம் கண்டு வருந்து கூற வேண்டுவது என்னுளது? நாம் நமது உரிமையை இழந்த நிலைமையில் இருக்கின்றோம். உரிமை களவாடப்பட்டு விட்டதாக மாறின் அதனிலும் இழிவு வேண்டியதில்லை. உரிமையைப்பயமின்றி விட்டுக் கொடுப்பவர்களைப் போலும் இழிவுடையார் வேறும் இருப்பர் என்றெண்ணவுங் கூடுமோ? தத்தமக் குற்ற உரிமையைப் பாதுகாக்க ஆற்றலில்லாதவர்கள் எங்ஙனம் மானிடராவார்? உரிமையை இழந்தும் மீட்கத் துணியாதவர்கள் எங்ஙனம் மானிட வருக்கத்திற்குள் வைத்தெண்ணப்படுவார்? நமது இந்தியாவின் மீது நமக்கிருந்த முழு உரிமை எங்கே? நமது செல்வாக்கு எங்கே? நமது பொன்னும் மணியும் நன்பொருளும் எங்கே? நமது உடன் பிறந்தார் தம் ஊக்கம் எங்கே? நம் மீது செலுத்தப்பட்டிருந்த அருள் எங்கே? நமது மனவமைதி எங்கே? நமக்குற்ற மதிப்பு எங்கே? நமது குன்றாத் தன்மை எங்கே? அனைத்தும் பேரிருளுக்குள் மறைந்து கிடக்கின்றன. அஃதே உண்மையாமன்றி அவற்றைப் பிறர் கைக்கொண்டார் என்பது உண்மையாகாது. உலகமாயையினால் ஞானம் மூடப்படுவதே போன்று பேரிருளினால் நமது உரிமைகள் மூடப்பட்டு விட்டன. அவ்விருள் என்பது பிற நாட்டார் தம் அதிகாரத்திமிரேயாம். பிறநாட்டாருடைய அதிகாரத்திமிர் என்று நமது இந்தியாவிற் புகுந்ததோ அன்று முதலே நமது உரிமைகள் அப்பேரிருளில் சிக்குண்டு விட்டன. அத்துடன் அநாகரிகமும் தலையெடுத்தோங்கியது. நமது இந்தியாவிற்கு முன்னூறு வருடங்களாகத் தீராத நோயைப் பிடித்துக்கொண்டது. அத்நோய் நாதனுக்குப் பல்லாயிரம் தடவை பூசை செலுத்தியும் நமது இந்தியா கண்விழிக்காது. கண்விழிப்படைதற்கு எத்தனையோ வைத்தியர்கள் பார்த்தும் பயன்படவில்லை. ஏனென்றால், இந்தியாவிற்கு ஏற்பட்டிருக்கிற மயக்கமே அனைத்திலும் மேலோங்கியிருத்தலினால் தான். அம்மயக்கம் வைத்தியர்களாலும் மாந்திரீகர்களாலும் யோகிகளாலும் எவராலும் நீக்கத்தக்கதன்று.

இந்தியா என்றும் நமது இந்தியாவே. எல்லா நாடுகளுக்கும் தலைமையுற்றதாயும் அருவாயும் இருந்தது நமது இந்தியாவே. எல்லா நாடுகளுக்கும் தலைமைவகித்து அரசு நடாத்திய நமது இந்தியா, ஒரு போழ்தும் அந்நாடுகளுக்குக் கீழ்மைப் பட்டதாகாது என்பதை கண்டுகூற வேண்டுவ தவசியமன்று. பிறநாடுகளுக்கு நாகரிகம் கற்பித்துக் கொடுத்தது நமது இந்தியா. பிறநாடுகளுக்கு உயிர் கொடுத்தது நமது இந்தியா. எல்லா நாடுகளும் தூங்கிக்கிடந்த பொழுது கைகொண்டுதட்டி உணர்த்தியது நமது இந்தியா. எல்லா நாடுகளும் பேச்சறியாக் குழவிகளாயிருந்த பொழுது அவற்றுக்குப் பாலூட்டி வளர்த்தது நமது இந்தியா. அவைகளுக்கு இன்னல்கள் வந்தபொழுது கைகொடுத்தது நமது இந்தியா. அவற்றிற்குப்பேசக் கற்றுக்கொடுத்தது நமது இந்தியா. அவற்றைப்பார்த்து "எனது அருமைக்குழவிகளே" என்றழைத்தது நமது இந்தியா. அவற்றிற்கு அருளும் பொருளும் கொடுத்துதவியது நமது இந்தியா. இப்பொழுது பிறநாடுகள் களித்துக் கூத்தாடுவது நம்து இந்தியாவினாலே தான். நான்கு வேதங்களும் பிறந்தது நமது இந்தியாவிலே தான். எல்லாச் சாஸ்திரங்கட்கும் எல்லாத் தொழில்களுக்கும் தாய் நமது இந்தியாவே. தருமம் பிறந்தது நமது இந்தியா நாட்டில். கருமம் தொலைந்ததும் நமது இந்தியா நாட்டில். அருள் விளைந்தது நமது இந்தியாவில். அன்பு ததும்பியது நமது இந்தியாவில். ஆட்சிமிளிர்ந்தது நமது இந்தியாவில். இன்றைநாளிலும் பிற நாடுகளெல்லாம் உயிர் வாழ்வது நமது இந்தியாவின் உதவியினாலேயே. அவை இருகைகளையும் உயரவெடுத்து அருளுக்கும் பொருளுக்கும் இரப்பது நமது இந்தியாவைப்பார்த்துத் தான். பிறநாடுகளின் உதவியின்றியே நமது இந்தியா நலம் பெற வாழும். ஆனால், இந்தியாவின் உதவியில்லாவிட்டால் பிறநாடுகள் கையும் வாயும் ஏந்திக்கொண்டு நிற்கவேண்டியது தான். பிறநாடுகட்கெல்லாம் ஒப்பற்ற துணைப் நிற்பது நமது இந்தியாவே. நமது இந்தியா படுத்துவிட்டால் பிறநாடுகளனைத்தும் சிதறுண்டுபோம். இன்றும் நமது இந்தியா அருளொடு தான் நிலவுகின்றது. நாளையும் நமது இந்தியாவே உலகத்தையெல்லாம் ஆளப்போகின்றது? முன்னுண்டதும் நமது இந்தியாவே யாகையால் மேலும் அந்நிலைமை வந்து கூடுமென்பதற்குச் சற்றேனும் ஐயமில்லை. காலம் என்றும் ஒரே தன்மையில் இருப்பதில்லை. அது சகடக்கால் போலச்சுற்றிக்கொண்டு வருகின்றது. சகடத்தின் மேனின்ற கால் கீழ்வருவதும் கீழ்நின்றகால் மேல் வருவதும் எஞ்ஞான்று முண்மையன்றோ? நமது இந்தியா முன்னைய ஆட்சியைக் கைக்கொள்ளப்போகின்றது. பழைய நிலைமை மாறி மாறி வந்து கொண்டேயிருக்குமென்பது ஒரு நீதியாகும். நமது இந்தியாவும் பிறநாடுகளும் முன்னைய நிலைமையையடைதற்குக் காலம் அடுத்து விட்டது.

முப்பத்துமூன்று கோடிப் புதல்வர்கட்குத் தாயாகிய இந்தியாவிற்கு ஒப்பற்ற சக்தி இல்லாமல் போகுமா? இந்தியாவின் ஆன்ம சக்தி ஆழ்ந்து கிடக்கின்றது. அவ்வான்ம சக்தி எழுப்பப்பட்டுவிட்டதானால் எத்துணை நாடுகள் அதனை எதிர்த்த போதிலும் அது பின் வாங்காது. இந்தியாவின் ஆன்ம சக்திக்கு முன் எந்தச் சக்தியும் நில்லாது. இந்தியாவின் ஆன்ம சக்தி தானகவே எழும்புவதற்குரிய காலம் ஏற்பட்டுவிட்டது.

நமது இந்தியா பிறர் விளையாடுதற்குரிய நாடன்று. எத்துணையோ மகான் மக்களை ஈன்றதும் இன்னும் எத்துணையோ மகான் மக்களை எழுப்புவதுமாகிய நமது இந்தியாவில் தன்நலம் கருதும் இழிதகையார் வாழ்தற்குரியாரல்லர். அவர்களுக்கு நமது இந்தியா எவ்வகையிலும் சொந்தமானதன்று. நமது இந்தியா நமக்கே. அதை நாமே போற்றவேண்டும். இனியேனும் நாம் நமது ஆழ்ந்த ஆன்ம சக்தியை வெளிப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

(இவ்வியாசத்தைச் சகோதரப் பத்திரிகைகளும் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்).

ராய சுப்பிரமணிய நாவலர்
"விசால ஹிருதயம்".
பத்மநாபபுரம்.

நம் நாட்டு வைத்தியம்.

——:o.——

......1926-1927-ஆம் வருஷத்தில் தாலூகா போர்டு 1-க்கு 3-ஆஸ்பத்திரி வீதம் 128-போர்டுகளுக்கும் 384-ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்தப் பணமும் ஒதுக்கிவைத்திருப்பதாக கவர்ன்மெண்டாருடைய அறிக்கையினால் தெரிகிறது.. இவ்வரிய உபகாரத்திற்காக கவர்ன்மெண்டாரைப் பொதுவாகவும் இது சம்பந்தப்பட்ட மந்திரியவர்களையும் மனதாரப் போற்றுகிறோம்.

ஆனால் இதிலிருக்கும் முக்கியமான ஒரு குறையை மட்டில் நாம் கெவர்ன்மெண்டாருக்கெடுத்துக் கூறாமலிருக்க முடியவில்லை. அதாவது கவர்ன்மெண்டார் அவர்கள் ஏற்படுத்தியிருக்கும் கிராமாந்திர ஆஸ்பத்திரிகளை மேனாட்டு அலோபதி முறையை யனுசரித்து நடத்தப்படுகிறதே தவிர, ஆங்கிலேயர் இந்தியாவிற்கு வியாபாரிகளாக வருவதற்கு முந்தியும், ஆரியர்கள் குடி புகுந்த காலத்திற்கு முன்னும், முக்கியமாய் தென் இந்தியாவில் அனுஷ்டிக்கப்பட்டிருந்த சித்த வைத்திய முறையையும் ஆரியர்கள் வந்த போது அவர்கள் கொண்டுவந்த ஆயுர்வேத முறையையும் மகமதியர்கள் குடியேறினது முதல் அவர்கள் கையாடிவரும் யுனானி வைத்திய முறையையும், அவைகளின் மேன்மையையும் கவர்ன்மெண்டார் சற்றுங் கவனியாமல் மேற்கண்ட 384-ஆஸ்பத்திரிகளை, இந்த 4-வகை வைத்திய முறைகளிலும் விதாச்சாரப்படி நடத்த முன்வராமல் இந்தியாவுக்குப் பொருந்தாததாயும் ஜஸ்தியில்லை பெற்றதுமான மேனாட்டு முறையிலேயே எல்லா ஆஸ்பத்திரிகளையும் நடத்துவதின் காரணமென்னவோ? கருத்தெதுவோ? சென்னை நகரில் கவர்ன்மெண்டாரே ஆயுர்வேத கலாசாலையேற்படுத்தி அதைச் சார்ந்த ஆஸ்பத்திரியும் நடத்திவர கிராமாந்திரங்களில் பாமர ஜனங்கள் எளிதில் தெரிந்து கொள்ளக்கூடிய ஆயுர்வேத சித்தவைத்திய யுனானி முறைகளை யனுஷ்டிக்க முன்வராததைப்பற்றி விசனிக்கிறோம்......

"நவ இந்தியா."

கோபிதாலூகா அரசியல் மகாநாடு

அக்கிராசனர் ஐயங்கார் நாயக்கரை திட்டும் போது மூர்ச்சைக் குள்ளானர்.

கூட்டத்தில் குழப்பமும் கூச்சலும் மன்னிப்பு வேண்டலும்.

ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்காரின் தென்னை மரங்களில் கள் இறக்க வில்லையாம் தெளுவுதான் இறக்குகிறாராம்.

வயிற்றுப் பிரசாரர்களின் கதி.

கோபிதாலூகா காங்கிரஸ் கமிட்டி மெம்பர்
ஸ்ரீமான் வி. ஆர். சுப்பு பண்டாரம் எழுதுகிறார்.

4-6-26 தேதி கோபி வேளாள ஹாஸ்டல் கட்டிடத்தில் சென்னை ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்கார் தலைமையின் கீழ் நடைபெற்றது. மகாநாட்டிற்கு சுயராஜ்யக்கட்சியைச் சேர்ந்த ஸ்ரீமான்கள் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார், வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் முதலியவர்களும் கே. சுப்பிரமணியம், சி. பி. சுப்பையா, சுப்ரமண்யபாண்டே முதலிய ஐயங்கார் கோஷ்டியாரும் கோபி தாலூகாவில் ஸ்ரீமான்கள் கே.என். நஞ்சப்ப கவுண்டர், ஐயம்பாளையம் ராஜாக்கவுண்டர், முத்துவேலப்ப கவுண்டர், கே. ஆர் சுப்பிரமணிய கவுண்டர், கைவல்யஸ்வாமிகள் முதலியவர்கள் வந்திருந்தனர். தாலூகாவிலிருந்து கிராமத்து ஜனங்கள் வரவில்லை. உள்ளூர் ஜனங்கள் சுமார் 150 ஜனங்கள் வந்திருந்தனர். திருப்பூர் எம். வி. கருப்பண்ண செட்டியார், ஈரோடு தாமஸ்பாலையா பிள்ளை இவர்களும் வந்திருந்தனர். மகாநாடு மாலை 2-மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. ஆரம்பத்தில் தேசிய கீதம் பாடப்பட்டதும் ஸ்ரீமான் கே. கே. சுப்பண்ண கவுண்டர் வரவேற்புப் பத்திரம் படித்தார் ஸ்ரீமான் முருகண கவுண்டர் அறிக்கைப் பத்திரம் படித்தார்.

தலைவரின் முன்னுரையும் மூர்ச்சையும்.

பின் கூட்டத்திற்கு எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் தலைமை வகித்து தமது முகவுரை பிரசங்கம் செய்தார். அவர் பேசியதில், "தற்சமயம் தேசத்தில் காங்கிரஸ்தான் பெரும்பாலும் ஜனங்களால் மதிக்கப்பட்ட சபையென்றும் காங்கிரசை ஆதரிப்பதுதான் நமது கடமை; காங்கிரஸ் இப்போது சுயராஜ்யக் கட்சியை ஏற்றுக்கொண்டிருக்கிறது; ஆகையால் அக்கட்சியைத்தான் மதித்து ஆதரிக்கவேண்டும்; தமது முழுக்காலத்தையும் தேசத் தொண்டிற்கு செலவு செய்ய வேண்டியவர்கள்தான் இப்போது தேசத்திற்குத் தேவையாயிருக்கிறது; காங்கிரஸ் அமைப்பு இப்போது சீர் கெட்டிருக்கிறது; கிராமம் தாலூகா ஜில்லா எல்லா காங்கிரஸ் சபைகளையும் சீர் திருத்தவேண்டும்; வகுப்பு துவேஷங்களை வளர்க்கக்கூடாது; ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் வகுப்பு துவேஷத்தை வளர்த்துவருகிறார்; அவர் கொஞ்சநாளாக காங்கிரஸ் கமிட்டி நிர்வாகப்பதவியை ராஜினாமா செய்யாமலிருந்துகொண்டே ஜஸ்டிஸ் கட்சிப்பிரசாரம் செய்து வருகிறார்; அவர் ராஜினாமா செய்து விட்டு வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சி பிரசாரம் செய்யட்டும்; நாயக்கர் செய்யும் பிரசாரம் யாரை என்ன செய்யும்; அவரை நீங்கள் இந்த ஜில்லாவில் இன்னும் எப்படித்தான் வைத்திருக்கிறீர்களோ தெரியவில்லை" என்று நாயக்கரை வெகு உக்கிரமாகத்தாக்கிப் பேசிக்கொண்டு வரும்போது (கூட்டம் அவர் முகக்கண்ணுக்குத் தோன்றினாலும் அவர் அகக்கண்ணுக்கு நாயக்கர் தோன்றிவிடவே) ஐயங்கார் மூர்ச்சையாகி தமது ஆசனத்திலிருந்து கீழே பட்டியடித்து வீழ்ந்தார். உடனே உபசாரங்கள் நடந்தன. சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் களை தெளிந்து எழுந்தார். மறுபடி அவர் நாயக்கரை நினைக்கவில்லை. மதுவிலக்கைப்பற்றி சிறிது நேரம் உட்கார்ந்து கொண்டே பேசினர்.

மூர்ச்சைக்கு முகாந்திரம்.

பொது ஜனங்கள் தலைவருக்குண்டான மயக்கத்திற்குப் பல காரணம் சொன்னார்கள். அதாவது, வெய்யலின் கொடுமை 1, பித்தம் தலைக்கேறி நாயக்கரைப் பற்றிப் பலவாறு பிதற்றியதாலுண்டானது 2, சத்தியத்திற்கு மாறாக உண்மை தலைவர் நாயக்கரைப் பற்றித்தாக்கிப்பேசியதற்குக் கடவுள் தண்டனை 3, அய்யங்காருக்கு மலை உச்சியாகிய ஊட்டிக் குளிர்ச்சி கோபி உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லை 4, என இன்னும் பல காரணங்கள் கூட்டத்தினர் பேசிக்கொண்டிருந்தனர். தலைவர் முன்னுரைப் பிரசங்கம் முடிந்ததும் தீர்மானங்கள் யோசனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் சுயராஜ்யக்கட்சியாருக்கு எல்லோரும் ஓட்டுக்கொடுக்கவேண்டுமென்ற தீர்மானத்தைப்பற்றிப்பேசும் போது, தாம் அதிகம் பேசமுடியாதென்றும், இன்னொருதடவை வந்து தமது அபிப்பிராயத்தைச் சொல்வதாயும், ஆனால் பொதுவாக தேசத்தில் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சியை ஆதரிப்பதாலும் பெரிய தலைவர்கள் அக்கட்சியிலிருப்பதால் எல்லோரும் காங்கிரசுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டுமென்றும் சுருக்கமாகப் பேசினர். ஸ்ரீமான் சுப்பிரமணியபாண்டே அதை ஆமோதித்துப் பேசினர்.

மதுவிலக்கில் ஸ்தல ஸ்தாபனம்.

அதன் பின் மது விலக்கு தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. ஸ்ரீமான் ராஜாக்கவுண்டர் அத்தீர்மானத்தைப் பற்றிப் பேசும்போது தாம் எடுத்துக்கொண்டதை விட்டுவிட்டு சுயராஜ்யக்கட்சியை ஆதரிப்பதில் பல கஷ்டங்களிருப்பதாயும் ஜஸ்டிஸ் கட்சி சூட்சி பலமாயிருப்பதாயும், தாலூகா போர்டு ஜில்லா போர்டுகளுக்கு மெம்பர்களை தேர்ந்தெடுப்பதில் பெருத்த கந்தாயக்காரர்களுக்கு ஜில்லா போர்டு தலைவர் நாமினேஷன் செய்து வைத்து ஜஸ்டிஸ் கட்சிக்கு ஓட்டுசேகரிக்கக் கந்தாயக்காரர்களை வசப்படுத்தி விடுகிறார்களென்றும், உதாரணமாக கோயமுத்தூர் ஜில்லா போர்டு தலைவர் இரத்தினசபாபதி முதலியார் இந்த கோபி தாலூகா போர்டுக்கு உள்ள 6 நாமினேஷன் ஸ்தானங்களையும தாழ்ந்த வகுப்பாருக்கென்று ஏற்பட்ட முறைப்படி தாழ்ந்த வகுப்பாருக்குக் கொடுக்காமல் ஆயிரக்கணக்கான கந்தாயமுள்ள பெரும் பணக்காரர்களுக்கே கொடுத்திருக்கிறார், அந்த ஸ்தானத்தை மெம்பர்களும் வெட்கமில்லாமல் வகித்து வருகிறார்கள் என்றும் நாமினேஷன் மெம்பர்களைப்பற்றி மிகவும் குறைவுபடப் பேசினர்.

எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை.

அதன் பின்னர் டை. தீர்மானத்தைப்பற்றி ஸ்ரீ சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் பேசும்போது தாம் கள்ளுக்குமரங்கொடுக்கவில்லையென்றும் தான் எந்தத்தோப்பிலாவது கள் முட்டி போட்டிருக்கிறதென்று ருஜு செய்கிறவர்களுக்கு 100 ரூபாய் இனாம் கொடுப்பதாயும் ஸ்ரீமான் இராமசாமி நாயக்கர் கொஞ்ச நாளாய் தம்மீது பொய்யும் புளுகும் "குடி அரசு" பத்திரிகையில் எழுதி வருகிறார்; அவர் என்னைமட்டுமல்லாது மகாத்மா காந்தி, கலியாணசுந்தர முதலியார் முதலிய தலைவர்களைக்கண்டித்து எழுதுகிறார். அத்தகைய பெரியவரை நான் எப்படி ஜெயிப்பது என்றும் நாயக்கரைப்பற்றி மனதுக்கு வந்தவாறு ஏசித்தும் நயமாகப் பேசுகிறதுபோல் அவரை இறக்கியும் ஏற்றியும் அவர் "மகாப் பெரியவர் மகாப் பெரியர்" என்று கேலி செய்து அபிநயங்காட்டியும் "கிலாடித்தனமாக"வும் "குல்லுத்தனமாக"வும் பேசிக் கொண்டுவந்து கடைசியாக நாயக்கர் தம் மோட்டார் ஒன்றைக்கேட்டதாகவும் அதைத் தாம் 1,000-க்கு மேல் பொறும்படியான மோட்டார் ஆனதால் கொடுக்க மறுத்ததாகவும் அதனால் நாயக்கர் தம்மைத் தூற்றிப்போய் எழுதிவருகிறார் என்றும் ஆபாச மொழிகளைக் கொண்டு பேசி முடித்தார். ஐய்யங்கார் நாயக்கரைப்பற்றி யோக்கியத்திற்கு மாறான வார்த்தைகளை உபயோகித்தபோது ஜனங்களுக்குமிகவும் ஆத்திரம் உண்டாயிற்று.

பிரசாரகரின் பேச்சு.

ஐயங்கார் பேசி முடிந்ததும் ஸ்ரீமான் கருப்பண்ண செட்டியார் எழுந்து ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் நாயக்கரைப்பற்றிப் பேசியதில் சில சந்தேகங்களிருக்கிறது; சில கேள்வி கேட்க தலைவர் அனுமதிகொடுக்க வேண்டுமென்று கேட்டார். தலைவர் அனுமதி கொடுக்க முடியாதென்று ஸ்ரீமான் பாலையா பிள்ளையைப் பேசவேண்டுமென அவருக்கு அனுமதி கொடுத்தார். ஜனங்கள் கூச்சலிட்டனர். பாலையாபிள்ளை பேசஆரம்பித்து தாம் 'குடி அரசு'ப்பத்திரிகை ஆபிசிலிருந்ததாயும் நாயக்கரவர்கள் நடத்தை தனக்குப் பிடிக்காமல் விட்டுவிட்டதாயும் ஐயங்கார் மகா உத்தமர், அவருடைய நல்ல புத்தியைத்தாம் கண்டு பிடித்துக் கொண்டதாயும் நாயக்கர் ஐயங்காரைப்பற்றித் தூற்றி எழுதுவது நாயக்கருக்கு நாசகாலமென்றும் அவர் செய்யும் அக்கிரமம் கடவுளுக்குப் பொறுக்காதென்றும் அவரை இன்னும் கடவுள் வைத்திருக்கிறாரே என்று தான் சதா கடவுளை கோபிப்பதாயும் இன்னும் பலவாறு பேசினர். அவர் தான் பேசும் போது ஐயங்கார் கம்பெனியார் தன்னை மோட்டாரில் கூட்டிப்போவதால் தான் பெரிய மனிதனாகி விட்டதாய் நினைத்து கண்டபடி உளறினர். உடனே கூட்டத்தில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது. பாளையாபிள்ளையைக் கண்டிக்க சிலர் ஆத்திரங் கொண்டனர். அவர்களுக்கு சமாதானம் சொல்லி அடக்கப்பட்டது.

முட்டி அவிழ்க்கமுடியாது.

பாலையா பிள்ளை பேச்சு நின்று போகவே ஸ்ரீமான் கருப்பண்ண செட்டியார் எழுந்து ஐயங்கார் பல மகாநாடுகளில் பேசியதை

எடுத்துக்காட்டி விட்டுக் கள்முட்டி இப்போது ஐயங்கார் தோப்பில் இருக்குகிறதா இல்லையா என்றும், ஒரு பிராமண வக்கீல் திரு. மகாலிங்கையர் எழுதியிருப்பதும் பொய்யாகுமா என்றும் கேள்விகள் கேட்டு ஐயங்காரை பதில் சொல்லும்படி கேட்டார். உடனே துரை ஐயங்கார் என்கிற ஒரு ஐயங்கார் பிராமணன் எழுந்து அக்கிராசனாதிபதி அனுமதியின்றி பேசக்கூடாது, விஷயத்தை விட்டு விஷயத்தைப் பேசக்கூடாதென்று சத்தமிட்டார். உடனே ஸ்ரீமான் சுப்பண்ண ஆசாரியார் எழுந்து "நீங்கள் மட்டும் அக்கிராசனர் அனுமதி இல்லாமல் எப்படி எழுந்து பேசலாம்" என்று கேட்டார் வெங்கிட்டரமண ஐயங்கார் எழுந்து தாம் மரங்களில் கள்ளுமுட்டி போடவில்லையென்றும் தெளுவு முட்டி போட்டிருப்பதாயும் சொன்னார். செட்டியார் "தெளுவு முட்டி என்றும் கள்முட்டி யென்றும் எப்படிக் கண்டு பிடிக்க முடியும்? ஒவ்வொரு முட்டியாய் எவ்வாறு பரிசோதிக்க முடியும்? ஆகையால் ஐயங்கார் இந்த நொண்டிச்சமாதனம் சொல்லாமல் எல்லாமரங்களையும் தேங்காய் உற்பத்திக்குத்தான்விட வேண்டும்" என்றார். "செட்டியாருக்காக முட்டி அவிழ்க்க முடியாது" என்றும் தாம் "சுதேச சர்க்கரை உண்டாக்க தெளுவு இறக்க முட்டி கட்டியிருப்பதாயும் ஸ்ரீமான் வெங்கிட்டரமண ஐயங்கார் சொன்னார்.

ஐயங்கார் குட்டு வெளியாதல்.

ஜனங்களுக்கு ஐயங்கார் முட்டி கள்ளு முட்டியா, தெளுவு முட்டியா என்ற சந்தேகம் உண்டாயிற்று. ஐயங்கார் முட்டியவிழ்க்க முடியாதென்றவுடன், கைவல்ய ஸ்வாமிகள் எழுந்து "ஐயங்கார் பேசிவந்தது சரிதான். ஒரே ஒரு கேள்வி கேட்கிறேன். அதற்கு அவர் இக்கூட்டத்தில் பதில் சொல்லவேண்டும். அதானது சென்ற வருஷம் ஸ்ரீமான் சி. ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் நஞ்சைப்புளியம்பட்டியில் நடந்த தாலூகா மகா நாட்டில் இதே வெங்கட்டரமண அய்யங்கார் தம் தோப்புகள் 5 வருஷ குத்தகைக்குக் கொடுத்திருப்பதாயும் குத்தகைதாரன் கள்முட்டி போட்டிருப்பதாயும் அதை தான் தடுக்க முடியாதென்றும் சொன்னாரா இல்லையா? அப்படிச் சொன்னபோது இதே ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் கூடவிருந்தார். செட்டியாரவர்கள் அதற்கு சாக்ஷி. செட்டியாரவர்கள் ஐயங்கார் புளியம்பட்டி மகாநாட்டில் அவ்வாறு சொன்னாரா இல்லையா என்பதைப்பற்றி சொல்லட்டும், நாங்கள் ஒப்புக் கொள்ளுகிறோம். இதற்கு சரியானபதில் சொல்லவேண்டும்" என்று ஸ்வாமிகள் கேட்டார். திரு.ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்கள் ஒன்றும் பேசாமல் புன்னகை புரிந்தார். அவர் ஒன்றும் உண்மைக்கு மாறாக பேசவழியில்லை. ஐயங்கார் குட்டு வெளியாகவே ஐயங்கார் முகத்தைப் பார்க்க முடியவில்லை. அவர் வாய்திறக்க வழியில்லை. ஐம்புலனில் சில அடங்கி விட்டன. முகம் கறுத்தது. கூட்டம் முற்றும் ஐயங்கார் முகத்தைப் பார்த்தது. ஐயங்கார் தலையை கீழே கவிழ்த்து தரையைப் பார்த்தார். ஒவ்வொருவர் பேசும்போதும் துள்ளிக் குதித்து வந்துபேசும் ஐயங்கார் நாவடங்கிற்று. "உப்புக் கண்டம் பறிகொடுத்த பாப்பாத்தி" போல் விழித்தார்.

கூட்டம் குழப்பத்தில் முடிதல்.

ஸ்வாமிகள் இக்கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும் என வற்புறுத்த ஆரம்பித்தார். பதிலில்லை. உடனே ஸ்வாமிகளுக்குக் கோபம் வந்து, பிறரைத் தூஷிக்கவா மகாநாடு நடக்கிறது? உண்மையிருக்குமானால் என் கேள்விக்குப் பதில் சொல்லவில்லை? இந்த மகா நாட்டில் என்ன எங்களுக்குவேலை; என்று எழுந்து வெளியே புறப்பட்டார். வள்ளியம்பாளையம் ஸ்ரீமான் நாராயணசாமிக் கவுண்டரும் வெளியில் வந்தார். கூட்டம் கூச்சலில் முடிந்தது. அநேகர் வெளியே வந்து விட்டனர். உடனே துரை அய்யங்கார் வெளியில் ஓடி வந்து ஸ்வாமிகளை சமாதானப்படுத்தினார். ஸ்வாமிகளும் கவுண்டரும் "ஸ்ரீமான் இராமசாமி நாயக்கரில்லாத போது சில காலிகளைக் கூட்டிவந்து ஒருவர் மாற்றி ஒருவர் அவரைத் தூஷிப்பதுதானா மகா நாட்டுக்கு வேலை? இதுதானா மகா நாடு? இந்த அய்யங்கார்களில் எவராவது யோக்கியமாகப் பேசினார்களா? என கேட்டார்" துரையய்யங்கார் "இனி அவ்வாறு நடக்காது, உள்ளே வரவேண்டு" மென ஸ்வாமிகளைக் கூட்டிப்போனார். ஸ்வாமிகள் உள்ளே போயும் கூட்டத்தினர் கலைந்து வெளியில் வந்து விட்டனர்.

குழப்பத்திற்குப் பின் கூட்டம்.

முதல் கூட்டம் கலவரத்தில் முடியவே பாக்கி தீர்மானங்களைப் பற்றிப் பேசவும் நிறைவேற்றவும் வெளியில் கூட்டம் கூடியது. கதர், தீண்டாமை, காலஞ்சென்ற தேச பக்தர்களுடைய குடும்பத்தினகட்கு அனுதாபம் முதலிய தீர்மானங்களை ஸ்ரீமான் வி. வி. வெள்ளியங்கிரிக்கவுண்டர், கே. சுப்ரமண்யம், வி. பி. சுப்பையா, எம். வி. கருப்பண செட்டியார் முதலிய கனவான்கள் தீர்மானங்களை பிரேரேபித்தும் ஆதரித்தும் ஆமோதித்தும் பேசினார்கள்.

திரு. ராஜாக் கவுண்டர் மன்னிப்பு.

தீர்மானங்கள் முடிந்ததும் ஸ்ரீமான் வி. ஆர். சுப்ரமண்யக்கவுண்டரவர்கள் எழுந்து தாம் சிறிது நேரம் பேச அனுமதி பெற்றுக்கொண்டு பின் வருமாறு பேசினார். இந்தக் கூட்டத்தில் ஒரு தீர்மானத்தைப்பற்றிப் பேசும் போது ஸ்ரீமான் ராஜாக் கவுண்டரவர்கள் கோயமுத்தூர் ஸ்ரீமான் வி. எஸ். இரத்தினசபாபதி முதலியாரவர்கள் தீர்மானத்திற்கு கொஞ்சமும் சம்பந்தமில்லாமல் கோபி தாலூகா போர்டு நாமினேஷன் ஸ்தானங்கள் ஆறையும் எங்களுக்குக் கொடுத்து விட்டார், தாழ்ந்த வகுப்பார்களுக்குக் கொடுக்கவில்லையென்றும் நாங்கள் அந்த ஸ்தானங்களை வெட்கமில்லாமல் வகித்து வருகிறோம் என்றும் குறிப்பிட்டார். அதன் உண்மையை பொது ஜனங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகி விட்டது. கோபி தாலூகா போர்டின் 6 நாமினேஷன் ஸ்தானமும் வழக்கம் போல்தான் இவ்வருஷமும் செய்யப்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் முதலியார் வழக்கத்துக்கு மீறி ஒன்றும் செய்யவில்லை. இரத்தினசபாபதி முதலியாருக்கு முன் இருந்த ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீமான் டி.ஏ. இராமலிங்கம் செட்டியார் கோபி தாலூகாவிலுள்ள தற்கால நாமினேஷன் 6 மெம்பர்களின் தகப்பன்மார்களுக்கே நாமினேஷன் கொடுத்திருந்தார். முதலியாரவர்கள் அவர்களுடைய மக்கள்களுக்குக்கொடுத்திருக்கிறார். இது தவிர நான் பவானி தாலூகாவில் எலெக்ஷனுக்கு நிற்க ஆரம்பித்த போது இதே ராஜாக்கவுண்டர் என்னை "வேண்டாம், நீ நாமினேஷன் செய்து கொள்ளலாம்" என்று சொன்னார். முன் சொன்ன விஷயங்களுக்கு இதோ ரிக்கார்டு களிருக்கிறதென்று சகல ரிக்கார்ட்டுகளையும் கூட்டத்தில் ஆஜர் செய்தார். உடனே ஸ்ரீமான் ராஜாக்கவுண்டர் தான் சொன்னதை வாபீஸ் வாங்கிக் கொண்டபின் திரு. கே. கே. சுப்பண்ண கவுண்டர் எல்லாருக்கும் வந்தனோபசாரம் சொன்னபின் கூட்டம் 8-மணிக்குக் கலைந்தது.

திரு. நாயக்கர்.

திரு ஈ. வே. இராமசாமி நாயக்கர் அவர்கள் ஆலப்புழையில் கூடும் திருவனந்தபுரம் தொழிலாளர் மகா நாட்டில் தலைமை வகிக்க 18-6-26 தேதி இரவு பிரயாணமானார், 22-6-26 தேதி இரவு ஈரோடு வந்து சேருவார்.

தமிழர் கடமை.

ஸ்ரீமான் எஸ். சீனிவாச ஐயங்கார் ராஜீனாமா செய்வாரா?

இல்லாதவரை அவரை ராஜீனாமா செய்யும்படி வற்புறுத்த வேண்டும்.

(சித்திர புத்திரன் எழுதுவது.)

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சீனிவாச ஐயங்கார் தமிழ் மக்களின் மதிப்பை இழந்துவிட்டார்

பார்ப்பனரல்லாதாரை எப்படியாவது ஒடுக்கி பார்ப்பன ஆதிகத்தை நிலைநிறுத்த வேண்டும் என்கிற கெட்ட எண்ணம் கொண்டு மகாத்மா காந்தியின் கருத்துக்கு விரோதமாகவும்காங்கிரஸின் அடிப்படையானகொள்கைகளுக்கு விரோதமாகவும், வேண்டுமென்றே சர்க்கார் பட்டதாரிகளையும் சர்க்கார்நியமன கௌரவ உத்தியோகம் பெற்றவர்களையும் காங்கிரசுக்குள் புகுத்திக்கொண்டு அவர்களை சட்டசபைக்கு அபேக்ஷகர்களாக நிறுத்தியும் அவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுக்க காங்கிரஸையும் காங்கிரஸ் பணத்தையும் உபயோகித்துக் கொண்டுவருவதினிமித்தம் காங்கிரஸின் மதிப்பும் யோக்கியதையும் குறைந்து வருவதோடு காங்கிரஸ்திருத்த முடியாத நிலைமையில் கொண்டுபோய் விட்டுக் கொண்டிருப்பதாலும், காங்கிரஸ் என்பதே பொது நலத்திற்கல்லாமல் ஒரு வகுப்பாரை அழித்து மற்றொரு வகுப்பாரை ஆதிக்கம் பெறச்செய்ய நிரந்தரமான ஆயுதமாக ஆக்கப்படுகிறபடியாலும், தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாத பெரும்பான்மை யோருக்கு ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் நம்பிக்கைக்குறைவு அதிகரித்து விட்டது. ஆதலால் ஸ்ரீமான் அய்யங்கார் அவர்களைக் கண்ணியமாய் விலகிக்கொள்ள வேண்டுகிறேன். அப்படிக்கில்லாதவரை ஆங்காங்குள்ள பார்ப்பனரல்லாத காங்கிரஸ்வாதிகள் மகாநாடுகூட்டி ஸ்ரீமான் சீனிவாசய்யங்காரிடம் தங்களுக்கு நம்பிக்கை இல்லாமையைத் தெரிவிப்பதோடு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமையை இராஜீனாமா செய்துவிட வேண்டும் என்று தீர்மானம் செய்தனுப்பவேண்டியது. அப்படி அவர் செய்யாதவரை தமிழ்நாடு மாகாண கமிட்டி கூட்டுவித்து ஸ்ரீமான் ஐயங்காரை தள்ளிவிட்டு வேறு தலைவரை நியமிக்க வேண்டியது. அப்படிச் செய்யாதவரை காங்கிரஸினால் பார்ப்பனரல்லாதார்கள் மிகுதியும் துன்பமடைய நேரிடும். டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரு நிர்வாகக் கமிட்டியில் இராஜீனாமா செய்துவிட்டார். ஸ்ரீமான் திரு வி. கல்யாணசுந்தர முதலியாரும், தான் இராஜீனாமா செய்து தீரவேண்டிய நிலைமையை ஏற்படுத்திக் கொண்டார். ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரும் காங்கிரஸை விட்டு விட்டதாகத்தான் முடிவுகட்டவேண்டியிருக்கிறது. இனியார் காங்கிரஸில் இருக்கிறார்கள்? மற்றபடி காங்கிரஸுக்கு உழைத்த பார்ப்பனரல்லாதார்கள் கமிட்டிக்கு வேண்டுமானால் கூலிக்கு ஆள் பிடித்தால்தான் உண்டு. ஆகையால் பார்ப்பனரல்லாதார் இது சமயம் உறங்கக் கூடாது.

காடிபாளையத்தில் நடந்த கோவை ஜில்லா கம்மவாரு 2-வது மகா நாட்டு விஷயம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம்.

———0———

II

சென்ற வாரத்திற்கு முன் 5-ம் இதழ் தலையங்கத்தில் 'வகுப்புவாரி பிரதிநிதித்துவம்!' என்ற தலைப்பின் கீழ், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி லால்குடியில் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி கூறின ஆக்ஷேபனைகளை 37 பாகங்களாக வகுத்து அவற்றுள் முதல் 12 பாகங்களுக்கு மட்டிலும் தக்கவாறு பதில் எழுதியிருந்தோம். மிஞ்சிய 25 பகுதிகளுக்கும் இவ்வாரம் சில எழுத முற்பட்டுள்ளோம். அவையாவன:—

13-வது, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, தற்சமயம் நடக்கும் வகுப்பு மகா நாடுகளைப் பார்த்தால் அரசாங்க விஷயமாக யார் என்ன நினைக்கிறார்கள் என்றே தெரியவில்லை, என்கிறார்,—

இதை தைரியமாய் ஒப்புக்கொண்டதற்கு நன்றி செலுத்துகிறோம். இவற்றிலிருந்து நாடெங்கும் வகுப்புணர்ச்சி மலிந்திருப்பதும் அக் காரணத்தால் அரசாங்கத்தைப் பற்றி ஜனங்களுக்கு அவ்வளவு கவலை இல்லை என்பதும் புலனாகிறது. ஆதலால் 'இரண்டொருவர் தங்களது சுயநலத்திற்காக வகுப்பு துவேஷத்தைக் கிளப்பி விடுகிறார்களேயல்லாமல் பொது மக்களிடம் அவ்வுணர்ச்சியில்லை' என்று பிராமணப் பத்திரிகைகள் சொல்லுவது யோக்கியப் பொறுப்பற்ற தனமென்பதும், நாடு பூராவும் அதே கவனத்தில் இருக்கிறது என்பதும் நன்கு புலனாகும். ஏன் அப்படி வகுப்புக் கவலையில் இருக்கிறது என்று யோசிப்போமானால் ஒரு வகுப்பாருக்கு மற்றொரு வகுப்பார் செய்யும் கொடுமையும் சூழ்ச்சியும் தாங்கமுடியாமலேயே யல்லாமல் வேறென்ன வென்று சொல்லமுடியும்?

14-வது, ஒவ்வொரு வகுப்புக்குள்ளும் உபவகுப்புகள் ஏற்படுவதால் பிரதிநிதித்துவம் எல்லையில்லாமல் போகும் என்கிறார்,—

இதற்கு ஆதாரமில்லை. அப்படி இருப்பதாக வைத்துக்கொண்டாலும் பாதகமில்லையென்றே சொல்லுவோம். ஆனால் தமிழ் நாட்டில் ஹிந்துக்களுள் மூன்று வகுப்பு தான் இது போழ்து வகுக்கப்பட்டிருக்கிறது. இதை அரசாங்கமுதல் பிராமணர் மற்றும் பலர் உட்பட எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதாவது:—

(அ) பிராமணர் என்று சொல்லிக்கொள்ளப்பட்ட நமது நாட்டுப் பார்ப்பனர்.

(ஆ) க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்று பார்ப்பனர்களால் சொல்லப்பட்ட பார்ப்பனர் அல்லாதார்.

(இ) பஞ்சமர் என்றும் தீண்டத்தகாதவர் என்றும் சண்டாளர் என்றும் பார்ப்பனர்களால் பெயரிடப்பட்ட ஆதிதிராவிடர்கள்.

இம் மூன்று வகுப்புகளுக்குத்தான் இப்போது வகுப்புவாரியாக பிரதிநிதித்துவம் கேட்கப்படுகிறது. இப்போதுள்ளவையும் இம் மூன்று வகுப்புக்களையாகும். இதை விட அதிகப்பிரிவுகள் ஏற்பட ஆதாரமில்லை. வகுப்பு வித்தியாசங்களின் அர்த்தமெல்லாம், ஒருவன் உயர்ந்தவன், மற்றவன் தாழ்ந்தவன் என்கிற உயர்வு தாழ்வு வித்தியாசத்தைக்கொண்டதேயல்லாமல்; செட்டியார், நாயுடு, நாயக்கர், முதலியார், பிள்ளை, கவுண்டர், உடையார், நாடார்; தேவர், ஐயர், ஐயங்கார் என்கிற பட்டத்தை ஆதாரமாகக் கொண்டதல்ல என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

பல காரணங்களால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கூடாது என்று சொல்லும் ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் போன்றவர்களும் இம் மூன்று பிரிவையே ஒப்புக்கொள்ளுகிறார்கள். சர்க்காரும் இம் மூன்று பிரிவை ஒப்புக்கொண்டிருக்கிறது. பார்ப்பனர்களும் இம் மூன்று பிரிவை ஒப்புக்கொண்டு, மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தின் கீழ் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஒரு வகையில் வழங்கி இருக்கிறது. காங்கிரசும் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை ஒப்புக்கொண்டு முஸ்லிம்களுக்குக் கொடுத்ததோடல்லாமல் மகாத்மாவும் ஒப்புக்கொண்டு காங்கிரஸ் வாதிகளிலேயே முஸ்லிம்களுக்கும் கிறிஸ்துவர்களுக்கும் தாழ்ந்த வகுப்பார் என்போர்களுக்கும் பிரதிநிதித்துவம் பிரித்துக் கொடுத்திருக்கிறது. தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி விதிகளில் 8-வது விதியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக்கு உள்ள 25-ஸ்தானங்களில் மகமதியர்களுக்கு நான்கு, கிறிஸ்தவர்களுக்கு ஒன்று, தீண்டாதவர்கள் என்கிற வகுப்பினருக்கு ஒன்று என்று பிரித்திருக்கிறது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி என்பது தற்சமயம் எப்படியிருந்தாலும் மகாத்மா தலைமையின்போது அதுதான் இந்தியாவின் அரசியல் ஸ்தாபனம். அதைத்தான் இந்திய தேசிய பார்லிமெண்டு என்றும் சொன்னோம். அதில் வகுப்பையும் பிரித்து பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்திய பிறகும், இந்திய தேசிய சமூகமும் சிறப்பாய் தமிழ்நாடு தேசிய சமூகமும் முழுவதும் ஒப்புக்கொண்டு அதனால் யாதொரு இடையூறுமில்லாமல் தேசிய காரியங்கள் நடந்துவரும்போதும், ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு எல்லையில்லாமல் போய்விடும் என்கிற பயம் அப்பொழுது ஏற்படாமல், இப்பொழுது ஏற்பட்ட காரணம் என்ன என்பது தெரியவில்லை.

15-வது, வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்பட்டதானால் சட்ட சபைகள் வகுப்புக் காட்சியாய் முடியும் என்கிறார்,—

இந்தியா தேசமெங்கும் வகுப்புக் காட்சியாய் இருக்கும்போது அதற்கு ஏற்பட்ட சட்டசபை அதைப்போலவே தான் இருக்க முடியும். அப்படிக்கில்லாமல், எல்லா வகுப்புக்களும் ஒரே வகுப்பார் பிரதிநிதியாய் இருக்கிறார்கள் என்றால், இந்தியாவை இந்தியர்களின் தன்மைக்கு இந்தியர்களே ஆளவேண்டும் என்று கூறுவதற்கும் இந்தியாவிற்கு முழு சுதந்திரம் வேண்டும் என்று கேட்பதற்கும் பொருள் என்ன? வகுப்பு தன்மையைப்பற்றி கவலையில்லை, ஜாதியைப்பற்றி கவலையில்லை என்று சொல்லுவோமானால் உத்தியோகத்தை ஐரோப்பிய மயமாய் இருப்பதைக் கலைந்து இந்திய வகுப்பு மயமாய் ஆக்க வேண்டும் என்று நாம் ஏன் பிரயத்தனப்படவேண்டும்? ஐரோப்பியர்களை விரட்டி விட்டு அவர்களுடைய உத்தியோகத்தை பார்ப்பனர்கள் அனுபவிக்கவா? அல்லாமல் இந்தியர்கள் அனுபவிக்க என்று சொன்னால், இந்தியர்கள் என்றால் என்ன? பல மதம் பல வகுப்புகள் கொண்டது. அப்படியானால் எல்லா மதமும் எல்லா மதஸ்தரும் எல்லா வகுப்பினரும் ஆளுவதுதான் இந்தியர் ஆளுகை, இந்தியர் அனுபவம் என்று சொல்லலாம்.

16-(இதைக்கொடுத்தால்) இதோடு நிற்காமல் உத்தியோகங்களிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் கல்வி போர்டுகளிலும் பிரதிநிதித்துவம் கேட்பார்கள் என்கிறார்,—

ஆம், கேட்போம். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் தத்துவமே அதுதான். பல வகுப்பார்கள் கொண்ட இந்தியாவின் ராஜரீக உத்தியோகத்திற்கு ஒரு வகுப்பார் மாத்திரம் எப்படி வாரிசுதாரர்களாக ஆகக்கூடும். "ஐயோ! கேட்பார்களே!" என்று ஏன் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஆத்திரப்படவேண்டும்? யார்வீட்டுசொத்து? "பிச்சைக்குவந்தவன் பெண்ணுக்கு மாப்பிள்ளையா" என்பது போல் ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் வகுப்புக்கு, இந்திய உத்தியோகத்தில் ஏகபோக பாத்தியமேது? உத்தியோகங்களிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் கல்வி போர்டிலும் கண்டிப்பாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இருப்பதாயிருந்தால்தான் இந்தியா இந்தியர்களால் ஆளப்படவேண்டும் என்று கேட்க உரிமை உண்டு. அதிலும் கல்வி போர்டில் தான் கண்டிப்பாய் பிரதிநிதித்துவம் வேண்டும். அதில் சரியான பிரதிநிதித்துவம் இல்லாததால் தான் இன்றைய தினம், பிராமணரல்லாதாரும் சிறப்பாய் தீண்டாதார் என்போரும் நமது நாட்டில் இவ்வளவு கேவலமான நிலைமையிலிருக்கக் காரணம்.

கல்வி இலாகாவை எடுத்துக்கொண்டால் வைஸ்சான்சலர் ஒரு சிவசாமி ஐயர், செனட் மெம்பர்களோ பல சீனிவாசய்யங்கார்கள், சர்வ கலாசாலை அங்கத்தினர்களோ பல ராமசாமி சாஸ்திரிகள், கல்வி இலாகா இன்ஸ்பெக்டர்களோ பல பிரணதார்த்திஹர சர்மாக்கள், தலைமை உபாத்தியாயர்களோ பல ஐயர் ஐயங்கார் ஆச்சாரியர் சர்மா சாஸ்திரிகள். இவற்றின் செலவுக்குப் பணமாத்திரம் கவுண்டர் முதலியார் செட்டியார் உடையார் நாயக்கர் நாயுடு பிள்ளை நாடார் கோனார் முதலியவர்கள் தங்களது குடித்தனம் கெடும்படி கள்ளும் சாராயமும் குடித்துக் கொடுக்க வேண்டும்; சர்க்கார் அந்த வரும்படியிலிருந்தே செலவு செய்யவேண்டும். இத்தனைப் பார்ப்பன ஓநாய்களையும் தப்பி பார்ப்பனரல்லாத பறையர் பள்ளர் சாம்பான் புலையன் சக்கிலி நாயக்கர் கவுண்டர் பிள்ளை முதலியார் நாயுடு இன்னாசிமுத்து முதலிய ஆட்டுக்குட்டிகள் கல்வியில் உருப்படி ஆவதென்றால் லேசான காரியமா?

இவ்வருஷம் ஒரு பள்ளியின் அரிவரி வகுப்பில் 98 பார்ப்பனரல்லாத குழந்தைகளும் 2 பார்ப்பனக் குழந்தைகளுமாக சேர்ந்து படிக்குமானால் இன்றைக்கு 14-வது வருஷம் இவர்களின் படிப்பைக் கவனித்தால் 98 பார்ப்பனப் பிள்ளைகள் 2 பார்ப்பனரல்லாத பிள்ளைகள், வீதமாகவே பி. ஏ. வகுப்பில்

(இதன் தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதா பேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன் றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே

குடி அரசு.

அக்ஷய-௵ ஆனி-மீ 6-௳

இனி தாமதம் வேண்டாம்

தற்கால காங்கிரஸையும் சுயராஜ்யக் கட்சியையும் பார்ப்பன ஆதிக்கத்திற்காக தமிழ்நாட்டுப் பார்ப்பனர்களால் சிருஷ்டிக்கப்பட்ட சூழ்ச்சி ஸ்தாபனமென்று பலதடவைகளில் எழுதி வந்திருக்கிறோம். ஆனால் அது சமயம் சிலர் நம்மீது காய்ந்து வந்தார்கள். எனினும் சீக்கிரத்தில் நாட்டிற்கு உண்மை நிலை வெளியாகுமென்றே அவற்றில் கவனம் செலுத்தாமல் நமது கருத்தை ஒளியாது வெளியிட்டுவந்தோம். இப்போது நமது கருத்தைத் தழுவி மற்றும் இரண்டொரு ஆதரிப்புகள் நேர்ந்திருப்பது பற்றி நாம் களிபேருவகை அடைகின்றோம். அவ்விரு பெரும் ஆதரிப்புகளும் திருவாளர்களான திரு. வி. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் ஆகியவர்களின் உண்மை உணர்ச்சிகளினின்று எழுந்தவைகளேயாகும்.

திரு. முதலியாரவர்கள் பார்ப்பனத் தலைவராய திரு. சீனிவாசப் பார்ப்பனருக்கு விடுத்துள்ள இறுதிக் கடிதத்திலும், பார்ப்பனக் கமிட்டியாய காங்கிரஸ் கமிட்டிக்கு அனுப்பியுள்ள தீர்மானத்திலும் (தீர்மான நகலை மற்றோர் பக்கத்தில் காண்க) தொக்கியிருப்பதுஎன்ன? தெளிந்த சிந்தையுடன் சுருக்கமாயும் நுட்பமாயும் நோக்குங்கால் அதன் உண்மை புலனாகும். அஃதாவது "தங்களது (ஐயங்கார்) தலைமையில் நடக்கும் இயக்கத்தில் ஒத்துழையாமைத் தத்துவம் காணக் கிடைக்கவில்லை; சில சுயநலப் புலிகள் ஒத்துழைப்பு நாட்டங்கொண்டு காங்கிரஸை வயப்படுத்திக்கொண்டார்கள்; நான் இதை அறியாமல் உங்களை யெல்லாம் நம்பி மோசம் போயினேன்; இது காலை விழித்துக்கொண்டேன்; விடைதாருங்கள்," என்பதேயாம்.

டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் அவர்களோ இப்பார்ப்பனர்களிடம் ஆதி முதல் நம்பிக்கை யில்லாதிருந்தும், "தேசம்," "தேசம்" என்னும் பெயரால் தன்னால் இயன்றவரை இப்பார்ப்பனர்களையும் அவர்தம் சூழ்ச்சிமுறைகளையும் ஆதரித்தே வந்தார். எவ்வளவு ஆதரித்தும் டாக்டர் நாயுடுகார் கண்ணுக்கு தேசம் உருப்படுவதாய்த் தோன்றாததோடு, தன்னையே பார்ப்பன ஆதிக்கத்திற்கு ஒரு ஆயுதமாய் உபயோகித்துக் கொள்வதாகவே தோன்றிவிட்டது. ஆதலால் அவர் விடை கேளாமலே விலகி விட்டார். அஃதாவது தமிழ்நாடு கமிட்டியிலிருந்து ஒரே முடிவாய் விலகிக் கொண்டார். அவரது ராஜினாமாக் கடிதத்தில் தொக்கியிருப்பது யாதெனில் (இதையும் மற்றோர் பக்கத்தில் காண்க) "பார்ப்பன ஆதிக்கத்திற்காகக் காங்கிரஸை உபயோகித்துக் கொண்டு நீங்கள் செய்யும் காரியத்திற்கு நான் உடந்தையாயிருக்க முடியாது" என்பதேயாம்.

யோக்கியமான பார்ப்பனரல்லாதாருக்கு இனி என்ன சான்று வேண்டும்? எனினும் இவைகள் இப்படியே முடிவுறுமா? இவர்கள் இந்நிலையிலேயேயிருக்க நமது பார்ப்பனர்கள் விட்டு விடுவார்களா? எனப் பலர் ஐயுறலாம். ஏனெனில் நமது பார்ப்பனத் தலைவர்களின் மோட்டார் வாகனங்களும், அவசரத் தந்திகளும் இராயப்பேட்டைக்கும் குற்றாலத்திற்கும் பறந்துகொண்டிருக்கின்றன. மீண்டும் அவர்களை இழுத்து சேற்றில் நுழைத்து மிதித்தாலும் மிதிப்பார்கள். எது எவ்வாறாயினும் ஆக. அதன் முடிவைப் பற்றி இனி நமக்குக் கவலையில்லை.

ஆனால் "காங்கிரஸ் கட்டளை" "காங்கிரஸ் கட்டளை" என்றும் "தேசத்திற்கு ஏதாவது ஒரு தேசீய காரியம் வேண்டாமா" என்றும் "இப்போது உள்ள இயக்கங்களில் சுயராஜ்யக் கட்சி ஒன்றே முற்போக்குள்ள கட்சியாய் - நாணயமுள்ள கட்சியாய் - கட்டுப்பாடான கட்சியாய் - இருக்கிற" தென்றும் சொல்லிக்கொண்டு பார்ப்பனர்களைத் தொடர்ந்து நடந்து, தூது சென்று "வயிறு வளர்த்த தாகர்களான" தேசபக்தர்கள், தேசியத் தொண்டர்கள், காங்கிரஸ் பிரசாரகர்கள் ஆகியோரின் கதி என்னவாகும் வென்பதே இது போழ்து நம்மிடை எழுந்த வினா. உண்மையிலேயே இப் பொல்லாப் பார்ப்பனர்களின் சூழ்ச்சிகளை அறியாமல், திரு முதலியார், டாக்டர் நாயுடுகார் முதலிய தலைவர்களைப் போன்று நம்பி மோசம்போன சுயநலம் பேணாத உண்மைதேசபக்தர்கள், தொண்டர்கள், பிரசாரகர்கள் சிலர் இருக்கலாம். அன்னோரும் இவர்களைப் போன்றே இனி விழித்துக்கொள்வார் என நம்புகிறோம். இதுவரை நாம் தனித்து நின்று இப்போலி இயக்கத்தையும் பார்ப்பனர்தம் சூழ்ச்சியையும் தாக்கியதின் பயனாக நம்மைப்பலர் போற்றியிருப்பினும்சிலர் தூற்றலுக்கும் பொய்ப்பழிகளுக்கும் வசை மொழிகளுக்கும் உள்ளாகியிருக்கும் விஷயம் வாசகர்களுக்கு விளங்கியிருக்கலாம். அது பற்றி ஒரு சிறிதும் நாம் கவலையுறவில்லை. சர்க்காரைத் தாக்குபவர்களுக்கு சிறைவாசமும், நமது பார்ப்பனரைத் தாக்குபவர்களுக்கு பழிச்சொல்லும் கிடைக்காமற் போகா.

சர்க்காருக்குப் பலமிருக்கின்றமையான் அவர்கள் தைரியமாய் முன் வந்து நம்மைப் பிடித்துத் தண்டித்துச் சிறைக்கனுப்புகிறார்கள். ஆனால் நமது பார்ப்பனர்கட்கோ அத்தகைய பலமில்லை சூழ்ச்சியும் தந்திரமுமே அவர்களது பலம் அதையே அவர்கள் உபயோகித்து வெல்லப் பார்ப்பார்கள். அம்முறையில் தாங்களும், தங்களால் ஆகாத சமயங்களில் சில 'லூட்டு'களுக்கும் 'காலி'களுக்கும் பணம் கொடுத்து தூற்றவும் பொய்ப்பழி சுமத்தவுமே செய்யக்கூடும். இவை அனைத்தையும் எதிர்பார்த்தே நாம் இத் துறையில் இறங்கினோமேயன்றி, நம்மை இப் பார்ப்பனர்கள் பூஜிப்பார்கள் என்ற அவாவுடன் இறங்கினோமில்லை. ஏனவே இப் பழிகளாலும் சூழ்ச்சிகளாலும் நமக்கு எவ்விதக் கஷ்டமோ அன்றி நஷ்டமோ ஏற்படினும் அவற்றையும் தைரியத்துடன் சகித்தே தீருவோம். இனியும் நமது சொந்த நஷ்டம், கஷ்டம், நமக்கு நாணயக் குறைவு முதலியன ஏற்படுத்தவேண்டும் என்பதாகச் செய்யும் பழிப்பிரசாரத்தின் பலன் ஆகிய இவையனைத்தையும் இக் கருமத்திற்கு ஆகுதியாய் விடத் தயாராகவே இருக்கிறோம். நாம் எடுத்துக்கொண்ட கருமம் நமக்குப் பெரிதே யன்றி அதன் பலனாய் நமது கதி என்னவாகும் என்பது நமக்குப் பெரிதல்ல. ஆதலால் நமது நண்பர்களும் அதைப்பற்றிக் கவலையுறவேண்டியதில்லை. நண்பர்கள் நம்மை ஆதரித்து எழுதிய பல கட்டுரைகளை பிரசுரிக்காததுபற்றி பொறுத்தருள வேண்டுகிறோம்.

இந்நிலைமையில் தமிழர்களான பார்ப்பனரல்லாதார் இனிச்செய்ய வேண்டியது என்னவென்பதுதான் நாம் இது போழ்து முக்கியமாய் கவனிக்கத்தக்கது. பார்ப்பனர்கள் முன்னேற்றத்திற்கு காங்கிரஸ், ஹிந்து மகா சபை, வருணாஸ்ரம தர்ம சபை ஆகிய எத்தனையோ ஸ்தாபனங்கள் இருக்கின்றன. மற்றும் வேறு எத்தகைய பொது நலச் சபைகளென்று ஏற்படுத்தினாலும் அவற்றிற்குள்ளும் தாங்கள் நுழைந்துகொண்டு அவற்றையும் தங்கள் வயப்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

பார்ப்பனரல்லாதாருக்கோ இவ்வுலகிலேயே தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்கிற ஸ்தாபனம் ஒன்றே சென்னையிலிருக்கிறது. அதுவும், நல்ல வேளையாய், பார்ப்பனர்களை சேர்ப்பதில்லை யென்ற விதிவிலக்குடனிருப்பதால் அதைப் பார்ப்பனர்கள் வசப்படுத்திக் கொள்ள முடியாது போயிற்று. ஆயினும் பார்ப்பனர்களின் எவ்வளவோ சூழ்ச்சிகளால் அதைத் தலையெடுக்க வொட்டாமல் அழுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதை அடியோடு ஒழிப்பதற்காகவே பார்ப்பனரல்லாதாரில் சிலரை வயப்படுத்தி, செலவுக்குப் பொருள் கொடுத்து ஏற்பாடு செய்து, சென்னை மாகாணச் சங்கத்தைத் தோற்றுவித்து, அதனாலான கொஞ்ச சகாயத்தையும் சாதித்துக் கொண்ட பிறகு இவர்களின் சூழ்ச்சி வெளியாகும் சமயம் பார்த்து அதை ஒழித்துவிட்டனர்.

ஆகவே இப்போது பார்ப்பனரல்லாதாருக்கென சமூகவியலுக்கும் அரசியலுக்கும் ஸ்தாபனம் வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சி எனப்படும் தென்னிந்திய நலவுரிமைச்சங்க

கோபியில் திரு. சீனிவாசய்யங்கார் நாடகக் கம்பெனி.

கோபிசெட்டிபாளையம் என்பது பல பிரபல குடியான மிராசுதார்களை யுடையது. அங்குள்ள பூமிகள் ஆதியில் அந்த தாலூகா பார்ப்பனரல்லாத வேளாளர்களுக்கே யிருந்துவந்தது. இப்பொழுதோ அவை ஏறக்குறைய முழுவதும் அடமானம், போக்கியம், கிரயம் மூலியமாய் கோபி பார்ப்பனர்களைச் சேர்ந்திருப்பதுடன் மிகுதியும் சேலம், கோயமுத்தூர், சென்னை முதலிய ஜில்லாக்களில் இருக்கும் பார்ப்பன வக்கீல்களுக்கும் உத்தியோகஸ்தர்களுக்குமே சொந்தமாயிருக்கிறது. குடித்தனக்காரர்கள் இந்தப் பார்ப்பனர்களை 'சுவாமிகளே' என்று கூப்பிட்டுக்கொண்டு அவர்கள் பின்னால் சுற்றுகிறவர்களாகவே யிருக்கிறார்கள். அல்லாமலும் பெரும்பாலும் இந்தக் குடியானவர்களை தப்பு வழிக்குக் கூட்டிப்போவதும் வக்கீல் வீட்டுக்குக் கூட்டிப் போவதும் சூதாடக் கூட்டிப்போவதும் அவர்கள் கலியாண காலங்களில் அவர்களுக்கு வெளியூர்களில் இருந்து தாசி வேசிகளையும் பார்ப்பன வித்வான்களையும் அழைத்துவரச் செய்து அவர்களுக்கு ஆயிரம் பத்தாயிரமாகச் செலவு செய்யச் செய்வதும் சிலர் அவர்களிடம் தரகு வாங்குவதுமாகிய இவைகளினால் குடியானவர்களைக் கடன்காரராக்கி சிலரைப் பாப்பராக்கி அவர்கள் பூமிகளை எழுதிவாங்குவதும் இந்த சில பார்ப்பனர்களேயாகும். இவ்வளவு யோக்கியதையில் உள்ள தங்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு ஐயங்காருக்கு ஓட்டு வாங்கிக் கொடுப்பதற்கு அந்த ஊர்களில் வாயில்லாப் பூச்சிகளும் சாதுக்களுமான இரண்டொரு குடியானவர்களைக் கை ஆயுதமாக வைத்துக்கொண்டு, கான்பரன்ஸ் என்ற அரசியல் விஷயத்தின் பேரால் ஒரு திருட்டுக்கூட்டம் கூட்டி, அதற்கு ஒரு பார்ப்பனரை தலைவராகத் தெரிந்தெடுத்ததாய் ஏற்பாடு செய்து, சில பார்ப்பனரல்லாத பேர்வைக்காரர், அநாவத ஓட்டு வேட்டைக் காரரையும் கூட்டிவைத்துக் கொண்டு, பார்ப்பனரல்லாதாரிலும் காலிகளான இரண்டொரு ஆள்களையும் கூட்டிவைத்து இவர்கள் பெயரால் ஓட்டு பெறச்செய்யும் சூழ்ச்சி நாடகத்தின் யோக்கியதையை என்னென்று சொல்லுவது?

நாடகத்தின் அயன் ராஜபார்ட்டான தலைவர் திரு. சீனிவாசய்யங்கார் பேசியதாவது:- "பார்ப்பனரல்லாதார் கட்சியான ஜஸ்டிஸ் கட்சியை வெட்டிப்புதைக்கவேண்டும். பார்ப்பனரல்லாதாரின் நன்மைக்குப் பாடுபடும் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரை வெட்டிப் புதைக்கவேண்டும்." இவைதான் அக்கிராசனர் பிரசங்கத்தின் சுருக்கம். இதைப் பேசும்போதே அவர்மூர்ச்சையாகி கீழேவிழுந்து ஆவி ஊஞ்சலாடி நிலை பெற்றதாம். நாடகத்தின் அயன் ஸ்திரீபார்ட்டான திரு. சி. வி. வெங்கட்டரமணய்யங்காரோ 'நான் மகா காங்கிரஸ் பதிவிரதை' இன்னமும் கன்னியே கழியவில்லை. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் பேச்சை நம்பாதீர்கள்; அவர் திருடர், பொய்யர், என்னைக் கற்பழிக்கப் பார்த்தவர், நான் ஒருநாளும் கற்பழியவில்லை." என்று தலைமயிரை அவிழ்த்து விரித்துவிட்டு, மாரடித்துக்கொண்டதுதான் பெண் வேஷத்தின் நடிப்பு. இந்தப் பதிவிரதைக்கு ஆள்களைக் கூட்டிவிட்டு வயிறு வளர்க்கும் தோழிகளான சில பார்ப்பனரல்லாத பிரசாரகர்களோ "ஆமாம்,! ஆமாம்,! நாயக்கரை நம்பாதீர்கள் ஸ்ரீமான் வெங்கட்டரமண அய்யங்கார் மகா பதிவிரதை எனக்குத் தெரியாமல் அவர் ஒரு காரியமும் செய்திருக்க முடியாது. என்னை வைத்துக்கொண்டுதான் என்றால்தான் - அவர் எல்லாக் காரியமும் செய்கிறது; இன்னமும் யாருடைய கையும் படவேயில்லை. ஆதலால் நாயக்கர் வார்த்தையை நம்பாதீர்கள்," என்று சொல்லி ஓட்டு வாங்குவதுதான் அத் தோழிகளுடைய நடிப்பாய் இருந்தது. இக் காரியங்களுக்குத் திரை பிடித்தும் தீவட்டி பிடித்தும் நிற்பதுதான் கோபி பார்ப்பனர்களான ஐயங்கார் நாடகக் கம்பெனியின் சிப்பந்திகளது நடிப்பாய் இருந்தது. உப வேஷக்காரர்களான பார்ப்பனரல்லாத சட்டசபை மெம்பர்களோ, யார் நடிப்பு சரியாயிருந்தாலும் சரி, யார் நடிப்பு சரியாயில்லாவிட்டாலும் சரி, எங்களைப் பொறுத்தவரை எங்களுக்கு ஓட்டுக் கொடுங்கள் என்பதே அவர்கள் நடிப்பாயிருந்தது. இந்நாடகத்தின் பெருமையை விளம்பரப்படுத்தி நோட்டீஸ் விநியோகம் செய்வதே பார்ப்பனப் பத்திரிகைகளின் கடமையாயிருந்தது.

முடிவில் எல்லா யோக்கியதையும் வெளியாகிவிட்டது. அதாவது இந் நாடகம் நடந்த 4, 5 நாள்களுக்குள்ளாக கோபி பிரமுகர்களும் பொது ஜனங்களும் இவர்களின் யோக்கியதையை அறிந்து, உண்மை அறிய ஆசைப்பட்டு, வேறு ஒரு கூட்டம் கூட்டி, திரு. ஈ. வெ இராமசாமிநாயக்கரையும் திரு. என். தண்டபாணி பிள்ளையையும் வரவழைத்து உண்மையை வெளியிடும்படி கேட்டுக் கொண்டார்கள். அந்தப்படியே ஒரு பெரிய பிரதிநிதித்துவக் கூட்டம் கூட்டி அக் கூட்டத்தில் அவ்விருவர்களும் திரு. எஸ். இராமநாதன் அவர்களும் மற்றும் திரு. எஸ். பி. கிருஷ்ணய்யர், திரு. ஜி. வி. நாராயணய்யர் ஆகியவர்களும் பேசினார்கள். பேசிய விஷயம் மறுமுறை வெளியாகும்.

ஆனாலும் கூட்ட ஆரம்பத்திலேயே திரு. எஸ். பி. கிருஷ்ணய்யர் எழுந்து 4, 5 நாளைக்கு முன் இந்த ஊரில் காங்கிரசின் பெயரால் ஒரு நாடகம் நடந்ததென்றும், அது காங்கிரஸுக்கு சம்பந்தப்பட்டதல்லவென்றும், அது பொது ஜனங்களால் நடத்தப்பட்டதல்லவென்றும், யாரோ சிலர் தங்களுக்கு வேண்டிய சிநேகிதர்களுக்காக சட்டசபைக்கு ஓட்டு வாங்கிக்கொடுக்க செய்த சூழ்ச்சியென்றும், அதில் பல ஒழுக்கமில்லாத காரியங்கள் நடந்திருக்கிறதென்றும், அக்கூட்டத்தில் மகாத்மாவைப்பற்றியோ அவர் கொள்கைகளைப்பற்றியோ ஒரு பிரஸ்தாபமும் இல்லையென்றும், இரண்டொரு தேசபக்தர்களை திட்டுவதும் எப்படி ஓட்டு சம்பாதிப்பதென்பதுமே முக்கிய விஷயமாயிருந்ததென்றும், தலைவரைத் தெரிந்தெடுத்ததில் கொஞ்சமும் புத்திசாலித்தனமாய் நடந்து கொள்ளவில்லையென்றும், இது போலவே உள்ளூர் விஷயங்களிலும் பல தவறுகள் செய்து வருகிறார்களென்றும், வந்திருக்கும் கனவான்கள் உண்மையான விஷயத்தைச் சொல்வார்கள், கவனமாய் கேட்கவேண்டுமென்றும்" சொன்னார். மற்ற விஷயம் பின்னால்.

(ஒரு நிருபர்.)

மாகிய மிதவாதக்கொள்கைக் கொண்ட ஸ்தாபனம் ஒன்றே யிருக்கிறதென்று கூறினோம். ஆதலால் பார்ப்பனரல்லாதார் சமூக நன்மையையும் தீவிர அரசியல் கொள்கையையும் விரும்புகிறவர்கள் அத்தென் இந்திய நலவுரிமைச் சங்கமான ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து, அதை சுவாதீனப்படுத்திக் கொண்டு, அதனின்றே தீவிர கிளர்ச்சி செய்தல் வேண்டும். அக்கட்சியினிடத்து வெறுப்பு யிருக்குமேயானால் சமூகவியலுக்கும் அரசியலுக்கும் பொதுவான கொள்கைகளை அமைத்து, தேசியப் பார்ப்பனரல்லாதார் கழகம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி, அதன் வாயிலாய் இக்காரியங்களை நடாத்தல் வேண்டும். இஃதல்லாது பார்ப்பனர் மெச்சும்படி ஜஸ்டிஸ் கட்சியைத் திட்டுவதும், பார்ப்பனரல்லாதார் மெச்சும்படி பிராமணீயத்தைத் திட்டுவதுமான குள்ளநரி வேலை இனி உதவவே உதவாது. உறுதியாய், தைரியமாய், ஆண்மையுடன் வெளி வந்துதான் ஆகவேண்டும்.

நமது நோக்கமும் கருத்தும் என்னவென வாசகர்கள் அறிய விரும்புவரேல், பார்ப்பனரல்லாதார் சமூகமுன்னேற்றங்கருதி உழைக்கும் தென் இந்திய நல உரிமைச்சங்கத்தைக் கைப்பற்றி, அதில் மகாத்மாவின் நிர்மாணத் திட்டத்தை புகுத்தி, அதையே பார்ப்பனரல்லாதாரின் சமூகவியல் - அரசியல் ஸ்தாபனமாக ஆக்கிக்கொள்ளலாம் என்றே தோன்றுகிறது. அது இயலாது என்று தோன்றினால் திரு. கலியாணசுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு, ஜனாப் மௌலானா சாஹிபு, திருவாளர்கள் சக்கரைச் செட்டியார், ஆரியா, எஸ். இராமநாதன், தண்டபாணி பிள்ளை முதலியோரும் மற்றும் ஒத்துழையாமையில் ஈடுபட்டு, கஷ்ட நஷ்டங்களை ஏற்று, உறுதியுடன் உழைத்து வந்த பார்ப்பனரல்லாத தேசபக்தர்களும் ஒன்று சேர்ந்து எவ்விதத் திட்டங்கொண்ட ஸ்தாபனம் வேண்டுமென்கிறார்களோ அவ்விதமாகவாவது ஏற்பாடு செய்தல் வேண்டும். இனித் தாமதித்தால் ஆபத்துக்குள்ளாக நேருமென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

டாக்டர் வரதராஜுலு நாயுடு.

மாகாண காங்கரஸ் நிர்வாகக் கமிட்டியிலிருந்து விலகுகிறார்.

தமிழ்நாடு மாகாண காங்கரஸ் நிர்வாகக் கமிட்டியிலிருந்தும், கான்பூர் காங்கரஸ் தீர்மானப் பிரகாரம் அமைக்கப்பட்ட செலக்டு கமிட்டியிலிருந்தும் தம்முடைய பதவிகளை டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்கள் இராஜிநாமாச் செய்துவிட்டார். தேசியவாதியாக இருக்கும் தாம் காங்கரஸ் பெயரால் தலைவர்கள் செய்யும் பற்பல தவறுதல்களுக்கு அனுமதித்துக்கொண்டு இருக்க முடியாதெனக் கூறுகிறார். சமூகச் சண்டைகள் அதிகரிப்பதும், பட்டதாரிகளுக்கு காங்கரஸ் அபேட்சகர்களாக நிற்க அனுமதி கொடுத்ததும் இவர் இராஜிநாமா செய்ததற்குக் காரணங்களென்று கூறப்படுகின்றது.

(5-ம் பக்கத் தொடர்ச்சி.)

பட்டுக் கொண்டிருப்பார்கள். இதன் காரணமென்ன? கல்வி இலாகா போர்டில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாததுதான் அல்லாமல் வேறு காரணம் என்ன சொல்லக்கூடும்? பிராமணரல்லாத பிள்ளைகளுக்கு புத்தியில்லை என்று சொல்லிவிட முடியுமா? ஒவ்வொரு இலாகாவிலும் பள்ளிக்கூடங்களிலும் வகுப்புப்படி உபாத்தியாயர்களை நியமித்தால் கண்டிப்பாய் எல்லா வகுப்புப் பிள்ளைகளும் சமமாகப் படிக்க வசதி ஏற்படும். இப்போது கல்வி இலாகாவில் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் ஏற்படாத காரணமே பிராமணரல்லாதார் கல்வி கற்காமலிருப்பதற்கும், முக்கியமாக தேசத்திற்கு உபயோகமான கல்வி ஏற்படாமலிருப்பதற்கும் கற்ற கல்வியும் அடிமைத் தனத்திற்கும் இழி தன்மைக்கும் நீச புத்திக்கும் சுய நலத்திற்கும் உதவவும், கொடுமையான சூழ்ச்சி முறையை ஏற்படுத்துவதற்கும் காரணமாயிருந்து வருகிறது.

நமது நாட்டைக் கொள்ளை அடிக்க வந்தவர்கள் "அன்னிய அரசாங்கத்தார்"; நமது நாட்டுக்குக் காவற்காரர்களாய் ஏற்பட்டவர்களோ, நமது பார்ப்பனர்கள். கொள்ளைக்காரர்களும் காவற்காரர்களும் ஒன்றுபட்டு விட்டால் நமது கதி என்னவென்பதைச் சொல்லவேண்டுமா?

17, 18-வது உத்தியோகம் பெற்றால் பெற்றவருக்குத்தான் நன்மையே தவிர வகுப்புக்கு நன்மையில்லை என்கிறார்,--- மேலும்,

19, 20-ல் ஒவ்வொரு வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தரும் தங்கள் வகுப்புக்கு என்ன நன்மை செய்வது என்று எண்ணுவார்களே தவிர தேசத்தைக் கவனிக்க மாட்டார்கள் என்றும் சொல்லுகிறார்,---

இங்கு முன்னுக்குப் பின் முரண்படப் பேசியுள்ளார் என்பது வாசகர்களுக்கே தெரியும் ஒவ்வொரு வகுப்பாரும் தத்தம் வகுப்பைப் பார்த்துக்கொண்டுதான் தேசத்தைப் பார்க்க முடியும். அவரவர் பெண்டு பிள்ளைகளைப் பட்டினி போட்டு வைத்துவிட்டு பிராமணர்களுக்கு சமாராதனை செய்தால் அதைப்போல முட்டாள்தனமான காரியம் வேறொன்று இருக்காது. பல வகுப்புகள் சேர்ந்ததுதான் நம் நாடு. ஒவ்வொரு வகுப்பும் அதனதன் நன்மையை நாடிவிட்டால் எல்லா வகுப்பும் நன்மையை அடைந்து விட்டதாகிவிடும். அப்போது நாடு முழுதும் நன்மையை அடைந்ததாகி விடும்.

18-வது, நூற்றுக்கு ஐந்து பேருக்குமேல் உத்தியோகம் கொடுக்கமுடியாது என்கிறார், அப்படியே வைத்துக் கொள்ளுவோம். அந்த நூற்றுக்கு ஐந்து விகிதத்தையே வகுப்பு எண்ணிக்கைக்குத் தகுந்த விதம் வைத்துக் கொள்ளுவதில் ஆக்ஷேபனை என்ன?

21-வது, ஸ்தல ஸ்தாபனம், கல்வித் துறை இவைகளுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அனாவஸ்யம் என்கிறார்,---

இதனால் மற்ற துறைகளுக்கு அவசியம் என்பதை இவரே ஒப்புக்கொள்ளுகிறார் என்றாகிறது. ஸ்தலஸ்தாபனத்திற்கும் கல்வித்துறைக்கு மாத்திரம் இவர் என் பயப்படவேண்டும்? முன் சொன்னது போல பிராமணர்களின் அட்டூழியத்திற்கு அவர்களுக்கு முக்கிய ஆதாரமாயிருப்பது கல்வித் துறையே; ஆதலால் எது போனாலும் அது மாத்திரம் தங்கள் கையைவிட்டு போகக் கூடாது என்று, இவ்வளவு தூரம் மாயக்கண்ணீர் வடிக்கிறார்.

22-வது, தாழ்ந்த வகுப்புக்கு நியமனமே போதுமென்கிறார்,---அப்படிப் போதாவிட்டால்,

23-ல் அவர்கள் ஓட்டுரிமையைத் தாராளமாக்கி மற்ற தொகுதிகளுடன் சமமாய்த் தேர்தல் நடத்துவது நலம் என்கிறார்,---

இவைகளில் இருக்கும் திருட்டுத்தனம் படிப்பவருக்கு விளங்காமல் போகாது. அதாவது தாழ்ந்த வகுப்பாரை சர்க்கார் நியமனத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருக்கும்படி செய்துவிட்டால் அவர்கள் சர்க்கார் தயவையே நாடிக்கொண்டிருப்பார்களே தவிர பிராமணரல்லாதார்களுடன் சேர மாட்டார்கள் என்கிற தந்திரம் ஒன்று; தாழ்ந்த வகுப்பாரின் ஓட்டுரிமையைத் தாராளமாக்கி வைத்துவிட்டால் அவர்களைத் தங்களோடு சேர்த்துக்கொண்டு ஏமாற்றி அந்த ஓட்டின்பலனையும் பிராமணரல்லாதார் தலையில் கையை வைத்துவிட்டு எல்லா ஸ்தானங்களையும் தாங்களே அபகரித்துக் கொள்ளலாம் என்கிற தந்திரம் மற்றொன்று.

மற்றவைகளுக்கு மறு முறையில் எழுதுவோம்.

இது என்ன மானக்கேடு.

சென்னைக் கார்ப்பரேஷனில் சுயராஜ்யக் கட்சித்தலைவர் ஸ்ரீமான் சாமி வெங்கடாசலம் செட்டியார் புருதுவத்தில் கோவை ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்காரை ஜெயித்து விட்டார். ஸ்ரீ ஐயங்கார் முதலில் தனது தென்னை மரத்தில் கள்ளுக்கு முட்டியே கட்டவில்லை என்றார். பிறகு தெருவுக்கு மாத்திரம் முட்டி கட்டினதாய்ச் சொன்னார். "சென்ற வருஷம் கோபி மகாநாட்டில் தென்னை மரங்களை ஐந்து வருஷக் குத்தகைக்குக் கொடுத்து விட்டேன். குத்தகைக்காரன் கட்டினால் நான் என்ன செய்யட்டும் என்று சொன்னீரே இப்பொழுது அடியோடு இல்லை என்கிறீரே இது என்ன பொய்" என்று கேட்க தலை குனிந்து கொண்டார். கடைசியாக வேறு வழியில்லாத போது "நாயக்கர் என்னை மோட்டார்கார் கேட்டார், நான் கொடுக்காததற்காக என்னைக் கெடுக்கப்பார்க்கிறார்" என்று அழுதார்.

நமது சென்னைக் கார்ப்பரேஷன் தலைவர் சாமி வெங்கிடாசலம் செட்டியாரோ கார்ப்பரேஷன் பணத்தில் தன் வீட்டுக்கு டெலிபோன் வைத்துக்கொண்டதைப் பற்றி கேட்டால், சர். பி. தியாகராய செட்டியார் வைத்துக்கொண்டார், அதனால் நானும் அப்படியே வைத்துக்கொண்டேன் என்றார். சர். பி.டி. செட்டியார் கார்ப்பரேஷன் பணத்தில் டெலிபோன் வைத்துக்கொள்ளவில்லையென்று ஆதாரம் காட்டிய பின், அதற்காக மன்னிப்பு கேட்டுக்கொண்டு, தணிகாசலம் செட்டியார் வைத்துக்கொண்டார், அதனால் வைத்துக்கொண்டேன் என்றார். அவரும் வைத்துக்கொள்ளவில்லை என்று ஆதாரம் காட்டினால் இப்போது திருமலைப்பிள்ளை வைத்துக் கொண்டார், அதனால் வைத்துக்கொண்டேன் என்கிறார். இப்படியே இது எங்கு போய் நிற்குமோ தெரியவில்லை.

தவிர, தான் ஒருபோதும் ஜஸ்டிஸ் கட்சியில் சேரவில்லை என்கிறார். சேருவதற்காக தான் போட்ட விண்ணப்பத்தைகாட்டினால், தெலுங்கர் கக்ஷி உண்டாக்குவதற்காக ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்தேன் என்று சொல்லுகிறார். இது என்ன மானக்கேடு? பரிசுத்தமும் கட்டுப்பாடும் ஒற்றுமையும் இருப்பதாய் சொல்லப்படும் சுயராஜ்யக் கட்சியில் பொய் சொல்லுகிற விஷயத்தில்தான் பரிசுத்தமான பொய்யும், எல்லோரும் கட்டுப்பாடாகச் சொல்லும் பொய்யும், அய்யங்கார் சென்ற வழியிலேயே செட்டியார் செல்லுகிறதுஎன்கிற ஒற்றுமையான பொய்யுமாய் இருக்கிறதே தவிர வேறுயோக்கியமான காரியத்தில் ஒன்றையும்காணோம். ஐயோ! சுயராஜ்யக் கக்ஷியே! உன்னை மதிக்கும்ஜனங்களும் இருக்கிறார்களே! அவர்களை நினைத்து அழுவதா? அல்லது உன்னை நினைத்து அழுவதா?

வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தின் வெற்றி.

தாழ்ந்த வகுப்பாருக்கும் தொழிலாளர்களுக்கும் தனிப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்த வேண்டும் என்பதை நமது பார்ப்பனர்கள் எவ்வளவோ தங்கள் சூழ்ச்சியின் மூலம் எதிர்த்தும் ஸ்ரீமான் ஜயவேலு போன்றவர்களை விலைக்கு வாங்கி தங்களுடன் சேர்த்துக் கொண்டு தங்களுக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சத்தம் போடச்செய்தும் சர்க்கார் அவ்வகுப்புக்கென்று பிரதிநிதித்துவம் கொடுக்க பார்லிமெண்டில் சம்மதித்து விட்டார்கள். தொழிலாளர்களுக்கும் அதுபோலவே பார்ப்பனர்களின் எவ்வளவோ சூழ்ச்சிகளை மீறி தனிப் பிரதி நிதித்துவம் கொடுக்கத்தீர்மானித்து விட்டார்கள். இதைப்பார்த்த பார்ப்பனப் பத்திரிகைகள் தங்கள் சூழ்ச்சிகளும் முட்டுக்கட்டைகளும் பலிக்காமல் போய் விட்டதை மூடிவைத்து விட்டு தொழிலாளர்களுக்கும் தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்கும் நல்ல பிள்ளைகள்போல் "இனி சும்மாயிருக்கக்கூடாது; அந்தந்த வகுப்பார் வற்புறுத்த வேண்டும்" என்று "கோழிதிருடியும் கூடக் குலாவுவது" போல் "சுதேசமித்திரன்" முதலிய பத்திரிகைகள் எழுதுகின்றன. எப்படி இருந்த போதிலும், வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கிடைப்பதற்கு யார் எந்த வகுப்பார் உதவியாயிருந்தாலும், எந்த வகுப்பார் விரோதமாயிருந்தாலும், இனி அதைப்பற்றி கவனிக்காமல் இவ்வகுப்பினர் ஒற்றுமையாயிருந்து, தங்கள் வகுப்பைச் சேர்ந்த உண்மைத் தலைவர்களைப் பின்பற்றி, இதை நிலைநிறுத்தி, அதனால் ஏற்படும் முழுப்பலனையும் தங்கள் வகுப்பு முன்னேற்றத்திற்கு ஆதாரமாக்கிக்கொள்ள வேண்டும். அந்தக்காரணம் பற்றியும் சர்க்கார் நியமனத்திற்கோ பொது தேர்தலில் தங்களுக்கென்று ஸ்தானங்கள் ஒதுக்கிவைப்பதற்கோ கண்டிப்பாய் ஒப்புக் கொள்ளக்கூடாது. தங்கள் வகுப்புத் தனித் தேர்தல் மூலமே தங்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும்படி பிரயத்தனப்பட

முரசொலி.

சுயாராஜ்யக் கட்சியின் பித்தலாட்ட முறை ஒன்றன்பின் ஒன்றாக வெளியாகிறது. இவற்றை 'திராவிட'னோ, 'குடி அரசோ' எடுத்து எழுதிவிட்டால் பிராமணப் பத்திரிகைகளுக்கு பொறுக்கமுடியாத கோபம் பொங்கிவிடும். அக் கோபக்கனலை உடனே மந்திரிகள் மீதும் திரு. இராமசாமிமுதலியார் மீதும் திருப்பி பத்திபத்தியாக எழுதி பேடி யுத்தம் செய்ய ஆரம்பித்துவிடுகின்றன. இது அவைகளின் ஜாதி பத்தி.

* * *

திரு. எ. கோவிந்தாச்சார்லு ஒரு ஆந்திர பிராமணர். ஓர் பெரிய காங்கிரஸ் வாதி. மேற்கு கோதாவரிஜில்லா காங்கிரஸ்கமிட்டியின் தலைவர், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் அங்கத்தவர். "சத்தியாக்கிரகி" என்னும் பெயர்கொண்ட வாரப் பத்திரிகை நடத்தி வருபவர். இவர் சொல்லுவதையும் பொய் என்று, துவேஷக் கண்ணாடி போட்டுள்ள "சுதேசமித்திர"னும் "சுயாராஜ்யா"வும் ஆண்மையுடன் தைரியமாய் எழுதுமா?

* * *

சென்னை சட்ட சபையினின்று "வீர முழக்கம்" (?!?) செய்து வெளியேறிய வீரர்களுள், தேசியக் கட்சியாரும் சுயராஜ்யக் கட்சியாரும் ஒன்று சேர்ந்தே வெளிவந்தார்கள். வெளியேறுவதற்குமுன் அவ்விரு கட்சியாருக்குள் ஓர் உடன்பாடேற்பட்டிருப்பதாக அறிகிறோம். அவ்வுடன்பாட்டு நிபந்தனைகள் இதுவரை இரகசியமாகவேயிருந்து வந்திருக்கின்றன. இரகசியம் ஏனோ? இதன் உட்கருத்தென்னே? ஓட்டர்களை ஏமாற்றுவதே!

* * *

அவ்வுடன்பாட்டு இரகசியத்தினுள் ஒன்று, சென்னைப்பிரமுகர் திரு. சீனிவாசய்யங்கார், அடுத்த காங்கிரஸ் கூடுதற்குமுன் உத்தியோக மறுப்பை நீக்கி விடுவதாக ஒப்புக் கொண்டிருக்கிறார் என்பதாம். ஏனோ இந்த சூழ்ச்சி! இனி திரு. கோவிந்தாச்சார்லு பத்திரிகையான "சத்தியாக்கிரகி" சீனிவாசய்யங்காரை வினவியுள்ள கேள்விகளைக் கவனிப்போம்.

* * *

அக்கேள்விகளுள் "—1. மந்திரி பதவிகளை ஏற்றுக் கொள்வதன் சம்பந்தமாய் சென்னை சட்டசபையிலுள்ள தேசியக் கட்சியினருக்கும் சீனிவாசய்யங்காருக்கும் எப்போதாவது இரகசியமாய்ப் பேச்சு வார்த்தை நடந்ததுண்டா? 2—எந்தெந்த காங்கிரஸ் தலைவர்களும் தேசியத் தலைவர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்? 3. அக்கூட்டத்தின் கடைசி முடிவென்ன? அப்போது தேசியக்கட்சியாருக்கு திரு. ஐயங்கார் கூறியதென்ன? 4. சபர்மதியில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் உத்தியோக மேற்றலுக்கு விரோதமாய் திரு. ஐயங்கார் பேசியதைப் பற்றி யாராவது அவரிடம் கேள்வி கேட்டதுண்டா? யாரால் கேட்கப்பட்டார்? கேள்வியென்ன? அவர் இறுத்தவிடை என்ன?"

* * *

இக்கேள்விகளுக்கு திரு. ஐயங்கார் இதுவரை பதில் கூறியதாக நமக்குத் தெரியவில்லை. "இல்லாதது பிறவாது, அள்ளாதது குறையாது." இந்த உடன்பாட்டு நிபந்தனை நடந்துதான் இருக்க வேண்டும். ஆனால் "சத்தியாக்கிரகி"யின் கேள்விகளுக்கு திரு. ஐயங்கார் தக்க பதில் அளிப்பாரா? இவைகளுக்கெல்லாம் பதில் எழுதிக்கொண்டிருப்பது கெட்ட (?) வழக்கமாகையால் இவற்றிற்குப் பதில் சொல்லவே மாட்டார் என்று ஒரு குருவி சொல்லுகிறது!.

* * *

மூடினகை கோடி பெறும். ஆதலால் அக்கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் இருந்தால்தான் திரு. ஐயங்காரின் ஒத்துழையா கொள்கையின் 'நாற்றமும்,' சுயசுயராஜ்யக்கட்சியின் ஒத்துழையாமை முக்காடும் நிலைக்கும். இல்லாக்கால், "வெட்கம்கெட்டு வெளிப்பட்ட மூளிக்கு முக்காடு எதுக்கடி" என்ற குதம்பை சித்தர் திருவாக்குக்கு இலக்காய், சுயராஜ்யக்கட்சியின் ஒத்துழையா முக்காடு தானே நெகிழ்ந்து பித்தலாட்டக் கட்சி என்று பெயர் வாங்கப் பின்வாங்காது.

* * *

தன்னலம் வெறுத்துப் பிறர் நலம் பேணும் பெரியோரே பொது நல கழகங்களுக்குத் தலைமை வகித்து இயக்குவார். இதற்கு உவமையாக இந்திய நாட்டு மாபெருஞ் சபையான காங்கிரஸ் மஹாசபையை இயக்கி வந்தவர்களினாலேயே உணரலாம். இந்திய நாட்டுத் 'தாத்தா'வான தாதாபாய் என்ன, கலங்கரை விளக்கு மேதா என்ன, உத்தமப் பிராமணன் கோகலே என்ன, அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண்டகை திலகரென்ன, பாஞ்சாலச் சிங்கம் லஜபதி என்ன, தனக்கென வாழாப் பிறர்க்குரியாளரான கர்மயோகி காந்தி என்ன, இன்னோரன்ன பிற தலைவர்கள் தியாகத்தில் குன்றியவர்களா? கருமம் மாற்றுவதில் பின்வாங்கியவர்களா? இத்தகைய சிறந்த செம்மணிகளின் தலைமையின்கீழ் காங்கிரஸ் இருந்த காலத்திலன்றோ அரசாங்கமும் அஞ்சி ஆட்டங்காடுத்தது.

* * *

சுயராஜ்யகட்சியின் அதிகம் திரு. ஐயங்கார் கைக்கு மாறியதும் காங்கிரசை கண்டு எவர் மதிக்கிறார்? எவர் அஞ்சுகிறார்? அதினும் "வங்காளத்தார் தாசுடையும் அரவிந்தரையும் கலங்கியது போன்று, சென்னை பார்ப்பனர்கள் சீனிவாசய்யங்காரை காங்கிரசுக்குக் கொடுத்து கலங்கியுள்ளார்" என்று தன் திருவாய் மலர்ந்தருளிய சத்தியமூர்த்தியின் புகழுக்குரிய திரு. சீனிவாசய்யங்காரின் தியாகமென்னே? கடனாற்றிய கருமமென்னே? வீரச்செய்கை என்னே?

* * *

மாசு நிறைந்த மனம் படைத்தோரையும், அழுக்கு நிறைந்த ஒழுக்கம் கொண்டோரையும் புனிதமாக்கும், ஒத்துழையாமை என்ற உத்தமக் கொள்கையை காந்தியடிகளால் நாட்டிடைக் கிளத்தப்பட்ட காலத்தில் சென்னைப் பிரமுகர் திரு. சீனிவாசய்யங்கார் யாது செய்து கொண்டிருந்தார்? ஆடு மாடுகளைப்பட்டிக்குள் அடைப்பது போன்று 30,000 வீரர்களை சிறைக்குள் அடைக்கும் போது திரு. ஐயங்கார் எந்நிலையிலிருந்தார்? அதிகாரவர்க்க நிழலில் பஞ்சு மெத்தை தைத்த நாற்காலியில், வீற்றிருந்து சர்க்காருக்கு யோசனை கூறிக் கொண்டன்றோ யிருந்தார்?

* * *

இதன் பிறகு காங்கரஸ் வாதியாக மாறினரோ! அப்பொழுதேனும், காந்தியடிகளின் - காங்கரஸ் - கட்டளைப்படி சட்டசபைக்குப் போகமல் நின்றாரா? வக்கீல் வேலையை விட்டு கோர்ட்டு பகிஷ்காரம் செய்தாரா? இல்லையே! இப்படி இருக்கும் போது, இவர் எப்படி "பெரிய" "பெரிய" தியாகியாவார்? இத்தகையார் கைக்கு வந்த காங்கிரசும் ஓர் பொது நல இயக்கமாகுமா?

* * *

திரு. அன்னபூர்ணையா ஓர் சிறந்த காங்கரஸ் வாதி. "காங்கரஸ்" என்று பெயர் கொண்ட ஒரு பத்திரிகையின்ஆசிரியர். திரு. சீனிவாசய்யங்கார் கைக்கு காங்கிரஸ் உள்ளானதைக்கண்டு இவ்வுண்மைப் பத்திரிகை பெரிதும் வருந்துகிறது. "காங்கரஸ்" தற்கால காங்கரஸ் தலைவரான மைலாப்பூர்ஐயங்காரைப் பற்றி வருந்தி எழுதுவதாவது:—

* * *

"திரு. சீனிவாசய்யங்காருடைய தலைமையில் காங்கிரஸ் எவ்வாறிருக்குமென்று காலஞ் செல்லச் செல்லத்தான் நிச்சயிக்கமுடியும். தேசத்தின் பொருட்டு அவர்களுக்குரிய அனைத்தையும் தியாகம்செய்த தேசாபிமானிகளால் இதுவரை காங்கிரஸ் நடத்தப்பட்டு வந்தது. தமது பெருவாரியான வக்கீல் தொழிலை விடாமல், ஓய்வு நேரங்களில் மட்டும் அரசியல் விவகாரங்களைக் கவனித்து வரும் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் காலத்திலிருந்து பிரசங்க மேடைத்தலைவர் காலம் ஆரம்பித்தது. தாதாபாய்நௌரோஜி காங்கிரஸே தமக்கு எல்லாமென்றிருந்தார். கோகலே, இந்திய ஊழியச் சங்கத்தினர் கொடுத்துவந்த சிறு தொகையைப் பெற்று வறுமை வாழ்வை மேற்கொண்டு காங்கிரஸை நடத்திவந்தார். திலகர், பிறவியிலேயே ஒத்துழையாதாராயிருந்தார். காந்தியோ சன்னியாசி. தாசர் இணையில்லாத் தியாகர். மோதிலால்பெருஞ்செல்வத்தைத் துறந்து தள்ளினர். ஆனால் நீதி மன்றஞ்சென்று பொருள் திரட்டிக்கொண்டும், தலைவராய் உலவிக்கொண்டு இருக்கும் திரு. எஸ். சீனிவாசய்யங்கார் இப்போதுவந்திருக்கிறார். விதியின் கொடுமை தானென்ன!"

* * *

அன்னபூர்ணையாவை ஆசிரியராகக்கொண்ட "காங்கிரஸ்" பத்திரிகைமேல் நாமும்

வேண்டும். இதைப்பற்றி சீர்திருத்தக்கமிட்டியார் செய்துள்ள சிபார்சுகளில் தாழ்ந்த வகுப்பாருக்கு தங்கள் பிரதிநிதிகளை தெரிந்தெடுக்க ஏற்பாடு செய்ய சென்னைக்கவர்ன்மெண்டுக்கு ஏற்கனவே அதிகார மிருப்பதாய்த் தெரிகிறது. ஆனால் இதுவரை அது அமலுக்கு வரவொட்டாமல் மூடி வைக்கப்பட்டுவிட்டது. இனியாவது அதை வெளிக்குக் கொண்டுவர முயற்சிக்க வேண்டியது தாழ்ந்த வகுப்பார் என்று சொல்லப்படும் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களுடைய கடமை என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

திருச்சி ஜில்லா பார்க்கவர் மகாநாடு

மேற்கற்கண்டார் கோட்டையில் சென்ற வைகாசி-மீ 4-ந் தேதி (17-5-26) யன்று தொடங்கி 5-ந் தேதி புதன்கிழமையன்று இம்மகாநாடு இனிது கலைந்தது. முதல்நாள் திருவாளர்களான ம. ரா. குமாரசாமி உடையார் அவர்களும், சாமி சிதம்பர உடையார் அவர்களும் "அன்பு" என்ற பொருள்குறித்தும் இரண்டாம் நாள் திருவாளர்களான ம. ரா. குமாரசாமி உடையார், மே. வே. துரைசாமி உடையார், பார்க்கவ பந்து பிட்டாதார் எம். ஆர். வெங்கடாசல உடையார் ஆகியவர்கள் 'தெய்வீக ஆசிரமம்" நிறுவவேண்டிய அவசியம் பற்றியும் பேசினார்கள். இதனை மேற்கற்கண்டார் கோட்டையில் அமைக்கவேண்டுமென்றும், திருவாளர்களான ம. ரா. குமாரசாமி, சாமி சிதம்பரனார் ஆகியவர்களை ஆசிரியர்களாய்த் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றும், ஆச்சிரம நிதி சேர்க்கும் பொறுப்பை பார்க்கவ பந்து அவர்கட்கு கொடுப்பதென்று முடிவு செய்யப்பெற்றது. திருவாளர் "தெய்வீகன்" ஆசிரியர் மே. வே. துரைசாமி உடையார் கும்பகோணம் மஹாநாடு, பார்க்கவர்குள் பாதிக்குமேல் நிறைந்த திருச்சி ஜில்லாவிற்கு 33 பேர் இருக்கவேண்டிய நிர்வாகக் கமிட்டிக்கு இரண்டு பிரதிநிதிகளைமட்டும் பொறுக்கி எடுத்தது கண்டிக்கத் தக்கதென்று பேசும்பொழுது அக்கூட்டத்தில்சரிவர யோசிக்கப்படாத விஷயங்களை எடுத்துக்காட்டி அதனை (ஆக்கவேலைகளை)ச் செய்யவேண்டிய அவசியத்தை வற்புறுத்தினார், என்று நமது நிருபர் எழுதுகிறார்.

சர்ம்மா வாசக சாலை.

நம்முடைய தாய் நாட்டிற்கு அரிய தொண்டாற்றி வந்து விண்ணுற்ற திரு. கிருஷ்ணசாமி சர்மாவின் ஞாபகார்த்தமாய் விஷ்ணு காஞ்சி ஆனைகட்டி வீதியில் இப் பெயர் கொண்ட வாசகசாலை ஒன்று நிறுவப்பெற்று நடைபெறுகிறது. தமிழ் தெலுங்கு ஆங்கிலப்பத்திரிகைகள் தருவிக்கப்படுகின்றன இதில் 3-ஆசிரியர்களைக்கொண்டு ஆத்மார்த்த மத சம்பிரதாயம், சுகாதாரம், தேசதத்துவம், சிக்கனம், ரஸாயனம், கணிதம்; நூல் நூற்றல், துணி நெய்தல் முதலிய வைகளைப் பற்றி இலவசமாக போதிக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் 250, தமிழில் 150 தெலுங்கில் 25 ஸம்ஸ்கிருதத்தில் 15 ஹிந்தியில் 4 புஸ்தகங்களிருக்கின்றன. இதனை வளர்க்க மாதப்பிரதிமாதம் இயன்றவரை சந்தா ரூபமாய் திரவிய சகாயம் செய்து வரும்படியாக ஷை வாசகசாலை காரியதரிசி திரு. டி. கே. சுந்தரவரதாசாரியார் வேண்டுகிறார்.

வியாக்கியானம் எழுத வேண்டுமா? "குடி அரசு"ம் "திராவிட"னும் எழுதும் எழுத்தைப் பொறுக்காத ஐயங்கார். "காங்கிரஸ்" கருத்தைக் கடந்து பேசட்டும் பார்ப்போம்! "யாருக்குப் பிறந்த மகன் யாருக்கு சீராட" என்பது "காங்கிரஸ்" பத்திரிகை கருத்துபோலும்.

* * *

ரோஜா முத்தையா

பட்டங்கூடாது

தமிழ் நாட்டுக் காங்கரஸ் கமிட்டித் தலைவர் திரு. எஸ். ஸ்ரீநிவாச ஐயங்காருக்கு திரு. கலியாண சுந்தர முதலியார் காங்கிரஸ் கமிட்டிக்குத்தான் கொண்டுவர இருக்கும் தீர்மானத்தைப்பற்றி எழுதுவதாவது.—

அன்பார்ந்த தலைவரே, வணக்கம். வரப்போகுஞ் சென்னைச் சட்ட சபைத் தேர்தலுக்குள் காங்கரஸ் சுயராஜ்யக் கட்சித் தொடர்பு கொண்டு அபேட்சகராக நிற்கும் சகோதரர்களுள் சிலர் பட்டஞ் சுமப்பது பற்றியும், அரசாங்கத்தார் தயவால் நியமனம் பெற்றிப்பது பற்றியும், கதருடையில் பற்றிழந்திருப்பது பற்றியும், தமிழ் நாட்டு அன்பர் சிலர் கடிதம் விடுத்திருக்கிறார். அதைப்பற்றிப் பொது ஜனங்கட்கு (11-6-26) "நவசக்தி" வாயிலாகப் பதிலிறுத்தேன். அப் பதிலை நோக்குமாறு தங்களை வேண்டுகிறேன்.

தங்களைப்போல மற்ற அபேட்சகர்களுமிருந்தால் ஐயப்பாட்டிற்கு இடம் ஏற்படல் அரிது. சில அபேட்சகர்கள் பட்டதாரிகளாகவும், அரசாங்கத்தார் தயவால் நியமனம்பெற்றவர்களாகவும், கதரில்பற்றில்லாதவர்களாகவும் இருத்தல் உண்மை. இவர்கள் நாளை பதவி ஏற்கமாட்டார்கள் என்பதற்கு என்ன உறுதி? இவர்கள் பட்ட முதலியவற்றைத் துறந்து, கதருடையில் பற்றுக் காட்டினாலன்றி என்போன்றார்க்கு நம்பிக்கை ஏற்படாது.

இப்பொழுது நாம் வழ வழவென்று இருப்போமாயின் பின்னே வருந்த நேரும். இப்பொழுதே எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். கட்டுப்பாடுகளைத் தளர விட விட நமது கட்சியின் ஆக்கங் குன்றுவது திண்ணம். காங்கரசில் ஒத்துழைப்பு நுழையாதவாறு காத்தல் வேண்டுமென்னுங் குறியோடு தங்களுடன் சேர்ந்து உழைக்கின்றேனே யன்றி வேறு எக்குறியோடும் உழைக்கின்றேனில்லை என்பது தங்கட்குத் தெரியும். பட்டத்தை இழிக்க இழித்துக் கூறிப் பட்டதாரிகளை ஆதரிப்பது அறமாகத் தோன்றவில்லை. கூர்த்தமதியுடைய தங்கட்கு நிலையை இன்னும் விரித்தோத வேண்டுவதில்லை.

தமிழ் நாட்டுக் காங்கரஸ் காரிய நிர்வாகக் கூட்டத்திலாதல், பொதுக் கூட்டத்திலாதல் கீழ்வருந் தீர்மானங் கொணர உறுதி கொண்டிருக்கிறேன். அதற்குத் தாங்கள் துணைபுரிவீரென நம்புகிறேன். அத்தீர்மானத்தை வரப்போகுந் தமிழ்நாட்டுக் காங்கரஸ் காரிய அல்லது பொதுக்கூட்டத்தில் கிளத்துமாறு வேண்டுகிறேன்.

தீர்மானம்.

கான்பூர் காங்கரஸ் தீர்மானத்துக்கிணங்கிச் சென்னைச் சட்ட சபை அபேட்சகராக நிற்பவருள் எவரேனும் பட்டதாரியாகவும், அரசாங்கத்தார் தயவால் எவ்வமைப்பிலாதல் நியமனம் பெற்றவராயும், கதருடையில் பற்றில்லாதவராயு மிருப்பரேல் அன்னார் முறையே பட்டத்தையும், நியமனத்தையும் துறக்குமாறும், கதருடையில் பற்றுக் கொள்ளுமாறும் இக்கூட்டந் தீர்மானிக்கிறது.

13-6-26. **திரு. வி. கலியாணசுந்தரன்**

மாயவரம் தாலூகா காங்கிரஸ் கமிட்டி.

மாயவரம் தாலூகா காங்கிரஸ் கமிட்டியின் நிர்வாகக்கூட்டம் 10-6-26-ல் கூடி செய்த தீர்மானங்களாவன:—

1. ஸ்ரீமான் டி. தியாகருஜய்யர் அவர்களிடம் நம்பிக்கையில்லை யாதலால் அவரை விலக்கி ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய பிள்ளையை அவர் ஸ்தானத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது.

2. மகாண கமிட்டியார் இக்கமிட்டிக்கு இதுவரை எவ்வுதவியும் செய்யாததால் நிர்மாண வேலைகள் தடைப்படுவதாயும் மாகாண கமிட்டியார் சுயநலங்கொண்டு ஏமாற்றுவதாயும் தீர்மானிக்கிறது.

3. இவ்விடம் இன்னம் சாதிப்போராட்டம் இருந்து வருவதால் எலெக்ஷன் பிரசாரத்திற்கு முன்பாக ஒரு பிரதிநிதியை அனுப்புவிக்கும்படி மாகாண கமிட்டியை கேட்டுக்கொள்ளுகிறது (இக்கமிட்டியாருடன் கலந்து யோசிக்க.)

4. திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களை மாயவரம் விஜயம் செய்யும்படியும் நமக்கு ஒரு வழி காட்டும்படியும் கேட்டுக் கொள்ளுகிறது. (ஒரு நிருபர்.)

தீக்குச்சித் தொழில்.

ஈரோட்டில் "சர்க்கா பிராண்டு" என்னும் கைராட்டின மார்க்குப் போட்ட பெரிய அளவுள்ள பெட்டிகள் தயாரிக்கப்பட்டு விற்பனையாகி வருகிறது. குச்சிகள் உறுதியாயும் மருந்து கெட்டியாயுமிருக்கிறது. பிறநாட்டுக் குச்சிகளுக்கு இது எவ்வகையிலும் குறைந்ததல்ல. இதன் விலை குரோஸ் 1-க்கு ரூ. 2-4-0. மொத்தமாக 25 குரோஸ் வாங்குபவர்களுக்கு ரூ. 2-க்குக் கொடுக்கிறார்கள்.

ஆனந்தா தீக்குச்சி தொழிற்சாலை, ஈரோடு.

பாலமநகர் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கும்பாபிஷேகம்.

பாண்டிய நாட்டு ஸ்தலங்கள் பதினான்கினுள் ஒன்றாகிய திருச்சுழியல் என்னும் க்ஷேத்திரத்திற்கு அருகே விளங்கும் பாலமநகர் என்னும் பாலையம்பட்டியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமிக்கு நாளது ஆனி-மீ 13-உ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நடைபெறும் பாலையம்பட்டி நாடார் சமூகத்தினருக்காக அம்பலம், திரு. அ. வ. வீரகுமாரு நாடார் தெரிவிக்கிறார்.

13-நாவல்கள் நிறைந்த

ஆனந்த கதாகல்பம்.

இதில் அநேக அபூர்வ நாவல்கள், அதிசயக் கதைகள், ஆனந்த நாடகங்கள், விகடங்கள், விநோதங்கள், கடிதங்கள், விடு கதைகள், மாயப்படங்கள், அழகிய சித்திரங்கள், வியாசங்கள் 500 குடும்ப ரகசியங்கள், 300 அனுபவ போதனைகள், நவீன கீதங்கள், இன்னும் அநேக விஷயங்களும் உள்ளன. முன் சம்பந்தமில்லாத தனித் தனி வால்யங்களாகும். 3-ம் வால்யம் ரூ. 3. 4-ம் வால்யம் ரூ. 3.

ஆனந்த கதா கல்ப நிலயம் ஸ்ரீரங்கம்.

சென்னை மாகாண
முதலாவது தெய்வேந்திர வேளாள மகாஜன சங்கம் மதுரை.

தெய்வேந்திர சகோதரர்களே!

நிகழும் 1926-ஆம் ஜூன்மீ 26, 27உ (ஆனிமீ 12, 13உ) சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மதுரை மேலவாசல் (டவுன் ஹாலுக்குப் பக்கத்தில்) யூனியன் மிஷன் ஹைஸ்கூல் ஹாலில் ஆம்பூர், திருவாளர் S. பிரகாசன் சாமுவேல், பி. ஏ., எல். டி., அவர்களின் அக்ராசனத்தின் கீழ், சென்னை மாகாண தெய்வேந்திர மகாநாடு நடைபெறும். அவ்வமயம் அநேக அரிய பெரிய அறிஞர் சிகாமணிகளும், அரசாங்க அதிகாரிகள் பலரும் விஜயம் செய்யப்போகிறார்கள். பல ஜில்லாக்களிலுமுள்ள தேய்வேந்திர சமூகத்தார் எல்லாரையும் ஒற்றுமைப்படுத்தும் முதலாவது சங்கம் இதுவே.

நாளது வருஷம் அக்டோபர்-மீ சென்னை சட்டசபைக்குப் புதிய மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்போகிறபடியால், ஏற்கனவே மகாநாடு கூட்டி நமது குறைகளைச் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது.

ஆகையால் தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்:—

ஞானமணி நாடார், வரவேற்பு கமிட்டி தலைவர்,

A. சாமுவேல் P. சுப்பரமணிய மூப்பனார், காரியதரிசிகள்.

தமிழ்நாடு காங்கிரஸ் காரியக்கமிட்டியின் கொடுங்கோன்மை.

கும்பகோணம் ஜில்லாக் கமிட்டியின் மெம்பர்களாகிய, எங்களுக்கு முன்னறிவிப்பு இல்லாமலும், ஆறுதாலுகாவில் நான்கின் பிரதிநிதிகள் ஆஜரில்லாமலும், மெம்பர்களாயில்லாத சிலரும் சேர்ந்து, யாதொரு அதிகாரமில்லாமலும் எதேச்சாதிகாரமாக புதிய தேர்தல் நடத்தியதானது செல்லத்தக்கதல்லவென்றும், சட்டப்படி மறுதேர்தல் நடத்தவேண்டுமென்று காரியகமிட்டிக்கு நாங்கள் எழுதியிருந்தோம். அதைப் பற்றி காரியக்கமிட்டியார் ஆலோசிக்கவேண்டியதில்லை என்று தீர்மானித்திருப்பதாய் மானேஜர் அறிவித்திருக்கிறார். ருஷிய சக்கிரவர்த்தி காலத்தில் கூட இம்மாதிரி கொடுங்கோன்மை நடைபெற்றிருக்காது என்பதை வாசகர்கள் தெரிந்து கொள்ளுவார்கள் என நம்புகிறோம்.

கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை,
காரியதரிசி, தாலூகா காங்கிரஸ் கமிட்டி.

M. S. பாபு சாயபு,
தஞ்சை ஜில்லா கிலாபத்து கமிட்டி, காரியதரிசி, சென்னை மாகாண கிலாபத்து கமிட்டி நிர்வாக சபை மெம்பர்.

பவானி தாலூகா குட்டிபாளையம்.

இவ்வூரில் இருக்கும் 50 வீட்டு முதலியார்களுக்குள் கட்சி இரண்டு பட்டு, 32 வீட்டு முதலியார்கள் ஒருகட்சியாகவும் 18 வீட்டு முதலியார்கள் ஒரு கட்சியாகவும் இருந்து நாளுக்கு நாள் யுத்தத்துக்கு ஆரம்பமாகிக்கொண்டே வருகிறது. இதனால் கூடிய சீக்கிரம் பெரிய கலவரம் ஏற்படுமென்பதையும் இதற்குமுன்னால் நடந்த சங்கதிகளைப் பற்றி 18 வீட்டு முதலியார்கள் ஈரோடு போலீஸ் சூப்ரண்டுக்கு மனுச்செய்து கொண்டிருக்கிறார்கள். இதற்குப் போலீஸ் அதிகாரிகள் கூடிய சீக்கிரம் வந்து சீர்திருத்தம் செய்வார்களென்று நம்புகிறேன். அல்லாதவரை இவர்களுக்குள் பெரியகலகம் ஆகும் என்பதாய்த் தெரியவருகிறது.

M. M. மாரியப்ப முதலி.

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

ஆயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணாக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்ணெரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திசாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை; தேகநாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை கருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

TRADE MARK.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

சத்திய வேத வீரியதாது லேகியம்.

20-நாள் 40-வேளைக்கு விலை ரூ. 2.

தேகாரோக்கியம் குன்றி, தேகம் வெளுத்து உட்காரவும் எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு சுறு சுறுப்பு, புஷ்டி, ஆண்மை முதலியவற்றை ஊட்டும். மூத்திரச் சூடு, சுக்கில சிராவகம், கல்லடைப்பு, குழிப்புண் உஷ்ணப்புண், அஸ்தி உருக்கம் முதலிய பயங்கர வியாதிகளின் ஆணி வேரைக்கெல்லி யெறிந்து தாதுவை கெட்டிப்படுத்தி தேகத்தை வனப்புறச்செய்யும் கைகண்ட ஔஷதம் சத்திய வேத வீரிய தாதுலேகியம் ஒன்றே.

விலாசம் தெரியப்படுத்தினால் சத்திய வேத வைத்திய சாலையில் செய்யப்படும் சகல வியாதிகளையும் போக்கும் மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் அனுப்பபடும்.

குறிப்பு:— டாக்டர் ஜி. எல். சாமி அவர்கள் திருச்சினாப்பள்ளி இடத்தெருவில் தருமதமிழ் சித்த வைத்திய சாலை ஒன்று நடத்தி வருகிறார். பிரதிதினமும் நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்கள் இனமாக மருந்து வாங்கி சாப்பிட்டு குணமடைந்து வருகிறார்கள்.

டாக்டர். ஜி. எல். சாமி,
சத்திய வேத வைத்தியசாலை, வாகநேரி—திருச்சினாப்பள்ளி.

இனம்! இனம்!

உயர்ந்த விசித்திரமான 15 சாமான்கள் கொடுக்கப்படும்.

அமெரிக்கா தேசத்தில் சித்திர வேலைகளுடன் தயார் செய்யப்பட்ட 18 காரட் கோல்டு பிளேட்டட் ரிஸ்லெட் கெடியாரம் தற்கால நாகரீகத்துக்கேற்ற மனோரம்மியமான பலவித விசித்திர பட்டைகள் தீர்த்து பளபளப்பான டயலும் உள்ளது. நெடுநாளைக்கு உழைக்கக்கூடியது. உரத்த சாமான்களால் செய்யப்பட்டது. இக் கெடியாரம் தருவிப்பவர்களுக்குக் கீழ்கண்ட சாமான்கள் இனாம்: மோதிரம் 1, கூந்தல் எண்ணெய் புட்டி 1, பட்டர் ப்ளை 1, பொத்தான் 4, உயர்ந்த கைகுட்டை 1, தந்த சீப்பு 1, செண்ட் பாட்டல் 1, பிரெஸ்லெட் 1, சிகரெட் கேஸ் 1. சேப்டி பின் செட் 1, விசித்திர பொம்மை 1. கெடியாரம் விலை 7—12—0



விலாசம்:-எஸ். ஆர். கிருஷ்ணா அண்டு கம்பெனி, நெ. 1 தம்புநாயக்கன் தெருவு மதராஸ்

பிரமேக குல சம்ஹாரி.

பலவித காந்தித் தடிப்புகள், 21 விதமேக ரோகம், 7-வித வெள்ளைரோகம், ரணம் அரையாப்பு, சூலை, வாதம் முதலிய நீராத கொடிய ரோகங்களையும் ஐந்தே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்டாக் இனாம்

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,
திருச்செங்கோடு. (தென் இந்தியா)

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள் தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்திசெய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷதசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹாசந்தனாதித் தைலம்.

தைலங்களுக்கெல்லாம் தலைமையானது!
வெய்யில் காலத்திற்கு மிகப்பயனுள்ளது!!

இம்மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும், ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து சற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள். அவைகளை நமது மருந்து விலைப்பட்டியின் கன்மப் பிரதியில் காணலாம்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 2—4—0
6-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 1—3—0

தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

குடி அரசு பத்திரிகை.

கிடைக்குமிடம்:—

ரயில்வே பிளாட்பாரங்களிலுள்ள எக்கின் பாதம்கம்பெனி புஸ்தக சாலைகளிலும்
கோயமுத்தூர்—ஸ்ரீ எ. ஆர். சிவானந்த முதலியார்.
சேலம்—ஸ்ரீ ராமாநுஜ புக்டிபோ
திருப்பூர்—ஸ்ரீ குரு. ராமலிங்கம் செட்டியார். மண்டி
திருச்சி—ஸ்ரீ எஸ். மாசிலாமணி பிள்ளை, திருச்சிக்கோட்டை.
கும்பகோணம்—ஸ்ரீ கா. கு. நீலமேகம் பிள்ளை, சுருட்டு வியாபாரம், பெரியகடைத்தெருவு.
திருவாரூர்—ஸ்ரீ வி. எஸ். ராமன், தேசாபிமான சங்கம்.
நாகபட்டணம்—ஸ்ரீ என். பி. காளியப்ப தேவர் நெ. 3242. கொல்லுபட்டரை
மதுரை—எம். முத்துவேலப்ப முதலியார், நெ. 35 நாயக்கர் புது தெருவு.
விருதுபட்டி—ஸ்ரீ பி. பழனிக்குமார பிள்ளை.
மதராஸ்—நியூஸ் ஏஜண்டு, நெ. 27. எரபாலு செட்டி வீதி.
கோலார்—ஸ்ரீ ப. மு. ராஜரத்தினம் சித்தார்த்த புஸ்தகசாலை சாம்பியன் ரீப்ஸ் போஸ்ட்டு.
கொழும்பு:— ஸ்ரீ பி. பி. கே. மாணிக்கவாசகம், நெ. 52. செட்டி தெருவு.
ஈப்போ—ஸ்ரீ எம். என். பிள்ளை C|o போர்நியோ மோட்டார் (லிமிடெட்.)
சிங்கப்பூர்—பிரிட்டிஷ் அண்டு அமெரிக்கன் நியூஸ் ஏஜன்சி நெ. 6 பேட்டரி ரோட்

மற்ற ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை.

சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தை நிலைநாட்டுவான் பொருட்டு போராடுவதற்கென, வெளிவருவது.

வருடசந்தா தபாற்செலவுடன் ரூ. 2

வீ. அருணாசலம்,
நெ. 52. செட்டித் தெரு, கொழும்பு.

"தொழிலாசிரியன்"

தொழில் முறைகளைக் கற்பிக்கும்
ஓர் மாதாந்திரத் தமிழ் சஞ்சிகை.

நம் தேச முன்னேற்றத்திற்கு இன்றியமையாத கல்வி, கைத்தொழில், விவசாயம், வர்த்தகம், வியாபாரம், வைத்தியம், மாந்திரீகம், ஜோதிஷம், இந்திரஜாலம், (Magic) மெஸ்மரிஸம், ஹிப்நாட்டிஸம், ஏழைகள் பணக்காரராவதற்குத் தகுந்த யோஜனைகள் முதலிய அரிய பெரிய விஷயங்கள், பல வித்வசிரோன்மணிகளால் எழுதப்பெற்று மாதம் தவறாது வெளிவந்துலாவுமாதலால், இன்றே தாங்களும் சந்தாதாரராகச் சேர்ந்து ஆதரிப்பீர்களென நம்புகிறோம்.

இதன் வருட சந்தா ரூ. 2—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 3—0—0
மாதிரி காப்பி இனாம்.

விளம்பர விகிதம் மிகவும் குறைவு!

காரியஸ்தர்:—

"தொழிலாசிரியன்" கார்யாலயம்,
சிவகங்கை, S. India.

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.
மூல திரவியம் — ரூ. 5,00,000.
வெளிவிடப்பட்டது —ரூ. 69,100,
வசூலிக்கப்பட்டது —ரூ. 43,890.
டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்சேட் டிபாசிட்டு
இரண்டு வருஷ, கெடுவு வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0
வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு ப[illegible] மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்சேட் டிபாசிட்டு.
ஒரு வருஷ கெடுவு, வட்டி.
100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0
வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டி கொடுக்கப்படும்.

இப் பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில், உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகர்யமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயற்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வருஷத்திலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும் அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாஸிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி. ராமச்சந்திர செட்டி,
31—5—26. மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் பிரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று சா. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.